# உரிமை

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக ஈழத்தமிழர் தகவல் மையம்

இதழ் : 62

திகதி: 31-01-2021

மின்னஞ்சல்

urimai2009@gmail.com


## பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைவரும் அணிதிரளவேண்டும்

அனைத்துலக தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் அறிக்கை



## சிறீலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவது சாத்தியமா?

ஜெனீவாவிலிருந்து பொஸ்கோ உரிமை மின்னிதழுக்கு செவ்வி



## உடைகிறது கோட்டாவின் இராணுவ வேலி


சஞ்ஜயன்



## சிறீலங்கா சுதந்திரதினம் தமிழின அழிப்பு துவங்கிய நாள்

தீபச்செல்வன்





## விக்னேஸ்வரன் அவர்கள் சிந்திக்கும் திறனை இழந்து விட்டாரா?

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி சுகாஸ் உரிமை மின்னிதழுக்கு செவ்வி



# பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைவரும் அணிதிரளவேண்டும்

## அனைத்துலக தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் அறிக்கை

தமிழர் தாயகத்தில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவன ஈர்ப்புப் போராட்டத்துக்கு வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் விடுத்துள்ள அழைப்புக்கு அனைத்துத் தரப்பினரும் தமது ஆதரவை வழங்கி தமது உணர்வுகளை வெளிப்படுத்த முன் வரவேண்டும் என அனைத்துலக தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் இன்று வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள், மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள், போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்களைத் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றமை, கருத்து சுதந்திரம் மீறல் ஆகியவற்றோடு தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றமை போன்ற செயல்களைக் கண்டித்து இந்தப் போராட்டத்துக்கு சிவில் அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.






இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் அனைத்துலக தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம், மேலும் தெரிவித்திருப்பதாவது:

"சிறீலங்கா தனது தேசிய சுதந்திர தினத்தை எதிர்வரும் 4 ஆம் திகதி கொண்டாடவிருக்கிறது. சிறீலங்கா சுதந்திரமடைந்ததாக கூறப்படும் நாள் தொடக்கம் தமிழ் மக்கள் தமது உரிமைகளை இழந்து இன்று இலங்கை தீவில் இருந்து தமிழர்களை முழுமையாக இல்லா தொழிற்பதற்கான முழு வேலைகளையும் சிங்கள பேரினவாத அரசு தனது அரசியல் இராணுவ வலிமைகளை கொண்டு முன்னெடுத்துவருகிறது. தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களுடைய

தொடர்ச்சி 12ஆம் பக்கம் →

# இன அழிப்பே இலக்கு என்ற சிங்கள இராணுவத்தின் பயிற்சி எமக்கு ஏன்?

## விக்னேஸ்வரனின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது - வடக்கு கிழக்கு கல்வி சமூகம்



காலம் காலமாக ஈழத் தமிழ் இனத்திற்கு எதிராக இனவழிப்பை பெருமெடுப்பில் செய்து வருகின்ற சிறீலங்கா இராணுவத்தினரின் பயிற்சி எமக்கு ஏன் தேவை என்று வடக்கு, கிழக்கு கல்வி சமூகம் கேள்வி எழுப்பியுள்ளது.

சிறீலங்கா அரச தரப்பை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் வீரசேகர, அனைவருக்கும் இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என கூறியுள்ள கருத்தை பாராளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரன் ஆதரித்திருப்பதும் 16 வயதுக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்களுக்கு பயிற்ச்சி அளிக்க வேண்டும் என்று கூறியிருப்பதும் அதற்கு அவர் வழங்கிய தன்னிலை விளக்கமும் கண்டனத்திற்குரிய விடயமாக கருதுவதாகவும் வடக்கு கிழக்கு கல்வி சமூகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வடக்கு, கிழக்கு கல்வி சமூகம் எழுப்பிய கேள்வி பின்வருமாறு,

“சிறீலங்கா இராணுவம் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை செய்து வருகின்றது. ஈழத் தமிழ் இனவழிப்பே இலக்கு எனக் கொண்ட இராணுவத்தின் பயிற்ச்சி எம்மை இன்னும் இன அழிப்புக்கு உள்ளாக்கும். இதன் ஆபத்தை உணராமல் முன்னாள் வட மாகாண முதல்வர் பாராளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரன் இவ்வாறு கூறியிருப்பது ஏற்புடையதல்ல.

வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானத்தை கொண்டு வந்தமை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நியாயமற்ற செயற்பாடுகளை துணிந்து எதிர்த்தமை, இனஅழிப்புக்கும் விடுதலைக்கும் குரல் கொடுத்தமை போன்ற சிறந்த செயல்களினால் தமிழ் மக்கள் மத்தியில் பெருமதிப்பை பெற்ற விக்கினேஸ்வரனின் இந்தக் கருத்து, அவரை ஆதரித்த மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நீதியரசராக கடந்த காலத்தில் பதவி வகித்த விக்கினேஸ்வரன் அவர்கள், ஈழத் தமிழ் மக்களுக்கு பெரும் இன

தொடர்ச்சி 13ஆம் பக்கம் →

# சனாதிபதியிடம் நான் ஒப்படைத்த எனது கணவர் எங்கே?




பாதுகாப்பு செயலாளராக இருந்த தற்போதைய சனாதிபதியிடம் தான் எனது கணவரை ஒப்படைத்தேன் முடிந்தால் எனது கணவரை என்னிடம் ஒப்படையுங்கள் சனாதிபதி ஆணைக்குழுவை நம்புகின்றோம் அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தலைவி தம்பிராசா செல்வராணி சவால் விடுத்துள்ளார். இன்று ஞாயிற்றுக்கிழமை (31) நண்பகல் திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேலும் குறிப்பிடுகையில் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ள தற்போதைய ஜனாதிபதி யுத்த காலத்தில் கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக இருந்த போதுதான் எனது கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்தேன். எனது கணவர் எங்கே என்று சொல்ல முடியாத ஜனாதிபதியால் ஆணைக்குழுவை

தொடர்ச்சி 13ஆம் பக்கம் →

# தேவையா இந்தப் பயிற்சி?

18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டம், சிறீலங்காவின் பொது பாதுகாப்பு அமைச்சர்றியர் அட்மிரல் சரத் வீரசேகரவினால் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், தெற்கில் இருந்து அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. நாட்டை இராணுவ மயப்படுத்த, கோட்டா அரசு முற்படுகிறது என்று எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. இது சர்வதேச அளவில் சிறீலங்கா தொடர்பாக எதிர்மறையான விம்பத்தை ஏற்படுத்தும் என்று முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக போன்றவர்களும் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இவ்வாறான தருணத்தில் 16 வயதை எட்டும் தமிழ் மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை அளிக்க வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தி, சர்ச்சைகளை கிளப்பி விட்டிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன். தமிழ் அதிகாரிகளைக் கொண்டே, தமிழில் ஆணைகளை வழங்கும் வகையில் பயிற்சிகளை அளிக்க அவர் ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

சிங்கள அதிகாரிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுவதற்கு அவர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தாலும், அவர் முன்மொழிந்துள்ள இராணுவப் பயிற்சித் திட்டம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆபத்தானது. இந்த இராணுவப் பயிற்சியின் மூலம் சிறிலங்கா அரசாங்கம் தனது இராணுவத்துக்கு வெள்ளையடிக்க முனைகிறது.

போர்க்குற்றங்களை புரிந்த, இனப்படுகொலைகளை செய்த சிறிலங்கா இராணுவம், 99 வீதமும் சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒன்று. போர்க்குற்றங்களை இழைத்த சிறீலங்கா இராணுவ அதிகாரிகளை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லுமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரால் பரிந்துரைக்கப்படும் அளவுக்கு, சிறிலங்கா இராணுவம் களங்கப்பட்டு கறைபடிந்து நிற்கிறது.

இவ்வாறான சிங்கள இராணுவத்தை கூண்டில் ஏற்றுவதற்கு தமிழர் தரப்பு முற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் தான் அனைவருக்கும் இராணுவப் பயிற்சி கொடுத்து வெள்ளையடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய முயற்சிகளுக்கு துணைபோகின்ற வகையில் அமைந்திருக்கிறது விக்னேஸ்வரனின் கருத்து. இந்திய அதிகாரிகள் மூலம் பயிற்சி அளிக்கலாம் என்ற அவரது யோசனை அதனை விட அபத்தமானது. இந்திய அதிகாரிகள் கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்களைப் பிடித்துச் சென்று, தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் பயிற்சி கொடுத்து தமிழர்களுக்கு எதிராகவே திருப்பி விட்ட வரலாற்றை இலகுவில் மறந்து விட முடியாது.

ஆக்கிரமிப்பு அரசுகள் விடுதலைப் போராட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும் நசுக்குவதற்கு, அவர்களுக்குள்ளேயே துணை ஆயுதப் படைகளை உருவாக்கிக் கொள்வது வழக்கம். சிறிலங்கா அரசும் அவ்வாறான துணை ஆயுதக் குழுக்களை வைத்து தமிழரின் உரிமை போராட்டத்தை நசுக்கப் பயன்படுத்திக் கொண்ட வரலாறு கசப்பானது.

இவ்வாறான கசப்பான பாடங்களை கற்றுக் கொண்ட பின்னரும், தமிழ்த் தேசியம் பேசும் தலைவர் ஒருவர், இராணுவப் பயிற்சிக்கு கைதூக்க முனைவது ஈழத் தமிழரை மீண்டும் அழிவுகளுக்குள் தள்ளவே வழிவகுக்கும்.

அவ்வாறான அழிவுகளுக்குத் தான் விக்னேஸ்வரன் துணை போகப் போகிறாரா?

–ஆசிரியர்.

# இலங்கை ஆட்சியாளர்கள் நீதி வழங்குவதற்கு தயாரில்லை

## ஐ.நா அதிகாரிகள் சுட்டிக்காட்டல்

*இலங்கையில் கடந்த கால குற்றங்களிற்கு பொறுப்புக்கூறல் காணப்படாதது குறித்து அச்சமடைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை அதிகாரிகள் கடந்த கால ஆயுத மோதல்களை தூண்டிய அதேவகையான மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் மீண்டும் இடம்பெறக்கூடும் என எச்சரித்துள்ளனர். சுமார் 12 வருடங்களிற்கு முன்னர்; தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடனான இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வந்தது. அன்று முதல் இலங்கையின் ஆட்சியாளர்கள் பொதுமக்களின் துயரங்களுக்கு தீர்வை காண்பதற்கோ அல்லது குற்றங்களை செய்தவர்களை பொறுப்புக் கூறச்செய்வதற்கே யுத்தத்தில் பாதிக்கப் பட்டவர்களிற்கு நீதி நஸ்டஈடு வழங்குவதற்கோ எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என ஐ.நா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.*



*ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் மிகவும் கடுமையான அறிக்கையொன்று பாரிய மனித உரிமை மீறல்களில ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளமை,மற்றும் அனைத்து தரப்பினரினதும் மனித உரிமை மீறல்களும் முன்னரை விட என தெரிவிக்கின்றனர். சட்டவிரோத படுகொலைகள் பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் கண்மூடித்தனமாக தடுத்துவைத்தல் சர்வதேச மனித உரிமை சட்டமீறல்கள் ஏனைய வன்முறைகளை தனது அமைப்பு ஆவணப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கின்றார் ஐக்கியநாடுகள் மனித உரிமை அலுவலக பேச்சாளர் ருவீனா சாம்டசானி தெரிவித்துள்ளார். இலங்கையில் இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்காக அரசாங்கங்கள் பல விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்தன என தெரிவித்துள்ள அவர் ஆனால் இவை எவற்றின் மூலமும் உறுதியான பலாபலன்கள் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளார்.*

*இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறல் குறித்த மிகவும் மந்தகதியிலான செயற்பாடுகளிற்கு அப்பால் சென்று பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளிற்கு அரசியல் ரீதியில தடைகளை விதிக்கும் விதத்திற்கு சென்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ள கண்காணிப்புகள் துன்புறுத்தல்கள் சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சடடத்தரணிகள் பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படுதல் போன்றவற்றையும் பதிவு செய்துள்ளது.*

*தமிழ் முஸ்லீம் சிறுபான்மை சமூகத்தினர் ஓரங்கட்டப்படுவது அதிகரிப்பது குறிப்பிடத்தக்க கரிசனைக்குரிய விடயமாக காணப்படுகின்றது என அந்த அறிக்கை தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் மிக உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகளிடமிருந்து வெளியாகும் பாரபட்சம் மற்றும் பிளவுபடுத்தும் தன்மை மிகுந்த கருத்துக்கள் மக்கள் மேலும் துருவமயப்படுத்தப்படும் வன்முறை ஆபத்தை உருவாக்குகின்றன என அறிக்கையை தயாரித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.*

*யுத்தம் முடிவடைந்தபோது பல அநீதிகள் இழைக்கப்பட்டபோது அதிகாரத்திலிருந்த பலர் தற்போது அரசாங்கத்தின் ஒரு பகுதியாக காணப்படுவது கவலையளிக்கின்றது என சாம்டசானி தெரிவிக்கின்றார். கடந்த வருடம் முதல் 28 முன்னாள் பணியிலுள்ள இராணுவ புலனாய்வு அதிகாரிகளை ஜனாதிபதி முக்கிய பதவிகளிற்கு நியமித்துள்ளார் என குறிப்பிடும் அவர் ஆகவே இவர்களே அதிகாரத்தில் தொடர்ந்தும் காணப்படுகின்றனர். இவர்களில் சிலர் யுத்தத்தின் இறுதிவருடங்களில்யுத்த குற்றங்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்பதே மிகவும் கவலையளிக்கின்றது என குறிப்பிடுகின்றார்.*

# மனித உரிமை ஆணையாளருடன் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை



*ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளருடன் சிறிலங்கா அவசரபேச்சுவார்த்தையொன்றை மேற்கொண்டுள்ளது. இந்த வாரம் வெளியாகியுள்ள மனித உரிமை ஆணையாளரின் கடுமையான அறிக்கை குறித்தே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன என வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

*நாங்கள் அவரது அலுவலகத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண் டோம். அவர் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் விடயங்கள் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள விடயங்கள் குறித்து இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என தெரிவித்துள்ளன.*

*ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் கடும் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் பதில் அறிக்கையை வெளியிடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அரசாங்கம் தற்போது ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் இணக்கப்பாட்டை எட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.*

# ஜேர்மன் தலைநகரில் “நீதியின் எழுச்சி”

## மாபெரும் கவனயீர்ப்பு ஒன்றுகூடல்


ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 46 ஆவது கூட்டத்தொடரினை முன்னிட்டு தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணையை யேர்மன் அரசு வலியுறுத்த வேண்டும் எனும் கோரிக்கையோடும் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற பரிந்துரைக்கு வலுச்சேர்க்கவும் யேர்மன் வெளிவிவகார அமைச்சுக்கு முன்பாக நடைபெறும் மாபெரும் கவனயீர்ப்பு ஒன்றுகூடல். *Auswrtiges Amt Werderscher Markt 1 10117 Berlin* என்ற இடத்தில் எதிர்வரும் 04.02.2021வியாழக்கிழமை மதியம் 12 மணி இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நடைபெறவிருக்கும் கூட்டத்தொடரில் சிறிலங்கா தொடர்பாக வரவிருக்கும் தீர்மானத்தின் வரைபில் முக்கிய பங்காற்ற உள்ள யேர்மன் அரசாங்கம் , இன அழிப்பிற்கு உள்ளான மக்களுக்கு பரிகார நீதி கிடைக்க வலியுறுத்த வேண்டும் என்பதை கோரி பெப்ரவரி 4 , சிறிலங்காவின் சுதந்திர நாள் - ஈழத்தமிழர்களின் கரிநாள் அன்று தலைநகரை நோக்கி அணிதிரள்வோம் என்று ஈழத்தமிழர் மக்கள் அவை - யேர்மனி தமிழ் இளையோர் அமைப்பு - யேர்மனி அமைப்புக்கள் அழைப்புவிடுத்துள்ளனர்.



# விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கத்திற்கு

## ஆதரவு வேண்டி இணையவழி மூலம் கலந்துரையாடல்




பிரித்தானியாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளைய செயற்பாட்டாளர்களால் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கத்திற்கு ஆதரவு வேண்டி இணையவழி மூலம் கலந்துரையாடல்களை தொடர்ச்சியாக முன்னெடுதுள்ளனர். *Scotland* ல் வாழும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களால் தமது பாராளுமன்ற உறுப்பினரான மதிப்புக்குரிய டேவிட் லிண்டனுடன் (*Hon. David Lindon MP*) ஐக்கியராட்சியத்தில் (*UK*) தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக ஒரு ஒன்றுகூடலை *Zoom* மூலமாக செவ்வாய்க்கிழமை 19/01/2021 நடத்தியிருந்தார்கள்.

பிரிட்டனின் சிறப்பு தீர்ப்பாய நீதிமன்றத்தின் தீர்பான "தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்துக் கொள்வதற்கான காரணங்கள் வலுவாக இல்லாத காரணத்தினால் அவர்களை அத்தடையில் இருந்து நீக்கவேண்டும் அல்லது தக்க காரணத்தை தரவேண்டும்" எனக் கேட்டிருந்தது. பிரிட்டனின் சிறப்பு தீர்ப்பாய நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்க உள்துறை அமைச்சருக்கு அழுத்தம் கொடுத்து தடையை நீக்க வேண்டும் என நாங்கள் அவரைக் கேட்டுக்கொண்டார்கள்.

அவரும் உள்துறை அமைச்சருக்கு தனது நிலைப்பாட்டை எழுதி அனுப்புவதாக உறுதிகூறினார், அத்துடன் அவர்களிடம் இருந்து கிடைக்கும் பதிலையும் அறியத்தருவதாக கூறியிருந்தார். இந்த கோவிட் -19 தொற்று நேரத்திலும் எங்களை சந்தித்த எம்.பி.க்கு நன்றி தெரிவித்தோம். இந்த கூட்டத்தை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கிளாஸ்கோ பகுதி செயற்பாட்டாளர்கள் திரு.மணிமாறன் (கிளாஸ்கோ பகுதி ஒருங்கிணைப்பாளர்) திரு.துரைராஜ், திரு.சோமசுந்திரம் ஒழுங்கு செய்திருந்தார்கள் மற்றும் திரு யோகலிங்கம் *TGTE MP*, திரு. நிமலன் (முன்னாள் *TGTE MP*) திரு.சதீஸ்குமார், திரு.சிவகுமார், திரு. சதீஸ்குமார், திரு.வகீசன், திரு. பெய்சல் பங்குபற்றி இருந்தார்கள், இந்தக் கூட்டத்தை திரு. தினேஷ் நிர்வகித்திருந்தார். இதுவரை பல பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துள்ளோம், அவர்களில் சிலர்.....

*Hon. Siobhain McDonagh MP, Hon. Stephen Timms MP, Hon. Wes Streeting MP, Hon. Feryal Clark MP, Hon. Jackie Doyle-Price MP, Hon. Paul Bristow MP, Hon. John McDonnell MP, Hon. Ruth Cadbury MP, Hon. Dan Carden MP, Hon. David Linden MP, Hon. Kirsty Blackman MP* க்களை தொடர்ச்சியாக சந்தித்தோம்.

இதனைத் தொடர்ந்து அடுத்த வாரம் *Hon. Gareth Thomas MP* யும் *Hon. Patrick Grady MP* யும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரித்தானியாவை தலமாக கொண்டு செயல்படும் இளையோர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# பின்லாந்து தமிழ் இளையோர் அமைப்பு அந்நாட்டு இராசதந்திரியுடன் சந்திப்பு



நேற்று முன் தினம் (29/01/2021) பின்லாந்து தமிழ் இளையோர் அமைப்பு பிரதிநிதிகளும், பின்லாந்து தமிழர்பேரவை பிரதிநிதியும் பின்லாந்தின், தெற்காசியாவிற்கான தூதுவர் திரு.ஹரி கமராய்னன் அவர்களையும், அவருடைய உதவியாளர் அன்னிக்கி ஹக்கலாவையும், *KIOS* என்னும் அரசசார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதியான,ஹதியா இல்போலா அவர்களையும் சந்தித்தனர். பின்லாந்தின் வெளிநாட்டமைச்சின் செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. தமிழர் தாயகமான வடகிழக்கு மாகாணங்களில் , சிறிலங்கா அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தாங்கள் கலந்துரையாட விரும்புவதாகவும், பிரசல்ஸ்ஸில் நடைபெறவுள்ள ஐரோப்பிய ஒன்றிய கூட்டத்தின் முன்னர் இந்தச் சந்திப்பு இடம்பெறவேண்டும் எனவும். தெற்காசிய நாடுகளிற்கான பின்லாந்து தூதுவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதற்கமைவாக இன்றைய சந்திப்பு இடம்பெற்றது. வடகிழக்கில் தற்போதுள்ள நிலைமை தொடர்பாக , விரிவாகவும் ஆதாரபூர்வமாகவும் விளக்கமளித்த இளையோர் அமைப்பு, பேரவை பிரதிநிதிகள் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான ஆவணங்கள் அடங்கிய கோவை ஒன்றை தூதுவரிடம் கையளித்தனர். மேலும் சிறிலங்கா அரசு புரிந்த தமிழினப் படுகொலையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணை செய்து தமிழர்களிற்கு நீதி வழங்குவதற்கு பின்லாந்து அரசு எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் , கோரிக்கை முன்வைத்தனர். இந்த விடயம் தொடர்பாக , தெற்காசிய தூதுவர், ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள தமது கொள்கை வகுப்பாளர்களிடம் இந்த ஆவணங்களை சேர்ப்பிப்பதாக உறுதியளித்தார். மேலும் இந்த சந்திப்பு குறித்து பின்லாந்தின் தெற்காசிய தூதுவர் தனது *Twitter* பக்கத்திலும் பதிவிட்டுள்ளார்.

# பெப்ரவரி 4 சிறீலங்காவின் சுதந்திர தினம்

## வடக்கு கிழக்கு சிவில் சமூகம் கருத்து

### கண்ணீரோடு வாழும் எமக்கு சிறீலங்காவின் சுதந்திர தினம் என்பது கரிநாளே.

**வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சனி**



எதிர்வரும் நான்காம் திகதி ஸ்ரீலங்கா அரசினுடைய சுதந்திர தினம் இந்த கொடூர யுத்தம் முடிந்த பிற்பாடு இராணுவத்தையும் இலங்கை அரசையும் நம்பி ஒப்படைத்த உறவுகளை தேடிய நாங்கள் இன்று வரை சுதந்திர தினத்தை கரி நாளாகவும் கருப்பு நாளாகவும் அனுஷ்டித்து கொண்டு வருகின்றோம். இம்முறையும் சுதந்திரதினத்தையும் பல்வேறுபட்ட போராட்டங்களும் கரி நாளாகவே நாம் அனுஸ்ரிக்கவுள்ளோம். இன்றுவரை கண்ணீருடனான போராட்டத்தினை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு இலங்கை அரசாங்கம் தீர்வு தராத நிலையில் தான் நாங்கள் சர்வதேச சர்வதேசத்திடம் உண்மை நிலையை எடுத்துக்கூறி கண்ணீர் வடித்து நீதிகோரிவருகின்றோம். உண்மையில் சர்வதேசமும் எங்களை ஒரு பாராமுகமாக தான் இருக்கின்றது. இந்த ஆட்சி மாற்றத்துக்குப் பின் அதாவது எங்களுக்கான ஒரு நீதியை எங்கள் உறவுகளுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் எங்களுடைய உரிமைகளை கோரி நாங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக எங்களுக்கான நீதியைப் பெறுவதற்கு எல்லோரும் ஒருமித்து முன்வரவேண்டும். இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாளாக துக்கம் நிறைந்த நாளாக நமக்கு சுதந்திரம் கிடைக்காதபோது இந்த சுதந்திரத்தை வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் மக்களும் புறக்கணித்து எமக்கான நீதியையும் நாங்கள் ஜனநாயக ரீதியில் வாழ்வதற்கான உரிமையினை நாம் பெறும்வரைக்கும் தொடர்ச்சியாக செயற்படுவோம்.

### சிறீலங்கா சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் தமிழர்கள் உரிமைகளை இழந்து வருகின்றோம்

**மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சபாரெத்தினம் சிவலோகநாதன்**



ஒவ்வொரு வருடமும் இலங்கை அரசாங்கம் நடாத்தும் சுதந்திர தினத்திற்கு எதிராக தமிழ் மக்கள் ஏதோ ஒரு வகையில் எதிர்ப்பு தெரிவித்து வந்திருக்கின்றார்கள் தந்தை செல்வா காலத்தில் இருந்து இந்தநிலை காணப்படுகின்றது. சிறீலங்கா சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் தமிழர்கள் உரிமைகளை இழந்து வருகின்றோம்.

வடக்கு கிழக்கில் செறிந்து வாழ்கின்ற தமிழ் பேசுகின்ற மக்களின் உரிமைகள் மீறப்படுகின்றன கையில் வழிபாட்டுத்தலங்கள் பறிப்பு, காணி அபகரிப்பு , காடழிப்பு, மண் அகழ்வு உள்ளிட்ட விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பின்புலத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை வரையிலான போராட்டத்தினை சிவில் சமூக அமைப்புக்கள் முன்னெடுக்கவுள்ளன இதற்கு தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளனர் .

சுதந்திரம் கிடைத்த பின்னர் தேசியக்கொடி அமைப்பில் தொடங்கி தேசிய கீதம் பாடுதல் வரையிலான விடயங்களை தமிழிழர்கள் புறக்கணிக்கப்படுவதனை நாங்கள் வரலாற்று ரீதியாக கண்டோம் .சுதந்திர தினம் என்பது தமிழ் மக்களுக்கு எட்டாக் கனியாக இருந்து வருகின்றது . மைலத்தமடு , மாதவனை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேச்சல்தரை விவகாரங்கள் தொடர்பாக அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் விரட்டப்பட்டு சிங்கள பெரும்பான்மை இன மக்கள் பயிர் செய்வதற்காக கிழக்குமகாணஆளுனர் அவர்கள் தன்னுடைய அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயல்பட்டுக் கொண்டிருப்பதன் பிரதிபலிப்பாக இன்று அந்த மாடுகள் இறந்து கொண்டிருக்கின்றன. அந்த மக்கள் வேதனையோடு வறுமையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் தொல்லியல் திணைக்களத்தின் மூலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அத்துமீறல் சம்பவங்கள் கால காலமாக தமது கலாச்சார வாழ்விடமாக பயன்படுத்திக் கொண்டிருந்த ஆலயங்கள் குடியிருந்த இடங்களிலெல்லாம், கலாச்சார பூமிகள் எல்லாம் தமிழர்களுடைய பாரம்பரிய பூமிகள் தொல்லியல் திணைக்களத்தின் மூலமாக பறிமுதல் செய்யப்படுவதும் நீதிமன்றத்தின் ஊடாக அவற்றை தன்னை படுத்துவதும் போன்ற செயல்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதேபோல் நீதிமன்ற கட்டளையை மீறியும் குருந்தூர் மலை ஆதிசிவன் கோயிலில் இருந்த சிலையும் சூலமும் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு எதிர்வரும் மூன்றாம் திகதி தொடக்கம் ஆறாம் திகதி வரை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தினை நடத்துவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள் . இந்த போராட்டம் சிவில் சமூகம் ,பாதிக்கப்பட்ட மக்கள், அரசியல் கட்சிகள் எல்லாம் இணைந்து செய்யும் ஒரு போராட்டமாக இருப்பதனால் நிச்சயமாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு பகுதி ஒரு எழுச்சியூட்டும் காலமாக அமையும் என்பதை இந்த இடத்தில் தெரிவித்து கொள்கின்றேன்.

### தமிழ் மக்கள் உரிமைகளை இழந்து வாழும்போது எப்படி சுதந்திர தினத்தை நினைவுகூரமுடியும்

**யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் உயந்தன்**



இலங்கையின் சுதந்திர தினத்தை அரசாங்கம் கொண்டாட இருக்கிறது இலங்கை அரசாங்கம் அதை சுதந்திர தினமாக ஏற்றுக் கொண்டாலும் தமிழ் மக்கள் மத்தியிலே அதனை ஏற்றுக் கொள்ளாத மனநிலை காணப்படுகிறது .காரணம் காலாதி காலமாக வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றார்கள் அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன அவர்களுடைய உரிமைகள் வழங்கப்படுகின்ற போது அவர்களுடைய நிலங்கள் அவருடைய வாழ்வாதாரப் பிரச்சினைகள், வழிபாட்டு இடங்கள் போன்றன கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கின்றது. நல்லிணக்கத்துடன் கூடிய ஒரு சமுதாயம் இலங்கையில் மிளிர வேண்டும் இன ரீதியான பாகுபாடு இருக்கக்கூடாது.தமிழர்களுடைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் தமிழர்களுடைய பிரதேசங்களில் புத்தர் சிலைகளை வைப்பதைத் தவிர்க்க வேண்டும். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கான உரிமைகள் இலங்கை அரசாங்கத்தினால் எப்போது கொடுக்கப்படுகின்றதோ அன்று தான் தமிழர்களுக்கு சுதந்திரதினமாக கருதப்படும்.

# சிறீலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவது சாத்தியமா?

ஜெனீவாவிலிருந்து
**பொஸ்கோ**
உரிமை மின்னிதழுக்கு
செவ்வி




பன்னாட்டு அரசியல் தளங்களில் ஈழத் தமிழர்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் மனித உரிமைச் செயற்பாட்டாளரும், தமிழர் இயக்கத்தின் பன்னாட்டு இணைப்பாளருமான பொஸ்கோ அவர்கள் மார்ச் மாதம் ஐ.நா மனிதவுரிமை கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில் ஐநா மனிதவுரிமை ஆணையாளர் ஸ்ரீலங்கா குறித்து அறிக்கை ஒன்றை வெளியிடடுள்ளார் இவ்விடயம் உள்ளிட்ட உரிமை மின்னிதழ் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பொஸ்கோ அவரகள் வழங்கிய செவியின் முதற்பகுதி உலகத் தமிழர்கள் மத்தியில் அதிகம் கூர்ந்து கவனிக்கப்பட்ட நிலையில் அவரின் செவ்வியின் நிறைவுப்பகுதி....

**அண்மையில் இலங்கை தொடர்பில் வெளிவந்திருக்கும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை குறித்த உங்களின் நிலைப்பாடு?**

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக பல்வேறு தரப்பினரும் பல்வேறு விதமாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். மறுபக்கத்தில் இதுவரை எவ்வித ஆக்கபூர்வமான செயல்பாடுகளையும் முன்னெடுக்காதவர்களும் அதற்கு சொந்தம் கொண்டாடும் வேடிக்கையான சம்பவங்களும் இடம்பெறுகின்றது. ஆனால் என்னைப் பொருத்தவரையில் முதலில் அதற்கு பலம் சேர்ப்பவர்களாக எமது மக்களே இருக்கிறார்கள். அந்தவகையில் இலங்கை தொடர்பிலான ஆணையாளரின் அறிக்கை தொகுப்பதற்கு முன்னர் அதற்கான தரவுகளினை சமர்ப்பிப்பதற்கு தமிழர்களுக்கு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 திகதி வரை காலம் இருந்தது. மேலும் ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் மற்றும் ஒப்பந்த அமைப்புக்களுக்குமான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு எமக்கு டிசம்பர் 15 திகதி வரை காலம் இருந்தது. இவர்களுக்கு நாம் எவ்வளவு கூடுதலான அறிக்கைகளினை அனுப்பி வைக்கிறோமோ அவ்வளவிற்கு அவர்களும் தமது அறிக்கையில் நாம் குறிப்பிடும் தரவுகளை ஆணையாளருக்கு தெரியப்படுத்துவார்கள்.

அந்தவகையில் இவ் விடயம் தொடர்பில் ஐ.நா பொறிமுறைக்குள் தமிழர் இயக்கமாக நாம் முன்னெடுத்த நகர்வுகள் பற்றி தெளிவாக விளக்க வேண்டியுள்ளது. கடந்தவருடம் பெப்ரவரி மாதம் சிறீலங்காவின் சுதந்திர நாளில் எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்களை அறிக்கைகளாக அனுப்பி வைத்ததில் இருந்தே இதற்கான செயல்பாடுகளை நாம் முன்னெடுக்கத் தொடங்கிவிட்டொம். அந்தவகையில் அன்றிலிருந்து இன்றுவரை தாயகத்தில் எமது மக்கள் முகம்கொடுக்கும் அனைத்துவிதமான பிரச்சினைகளையும் எம்மால் இயன்றளவு தமிழர் இயக்கத்தின் இணை அமைப்புக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக அறிக்கைகளை சமர்ப்பிப்பதன் ஊடாக தெரியப்படுத்திக் கொண்டே இருக்கின்றோம்.

ஆணையாளரின் அறிக்கை மிகவும் பலமானதாக வெளிவருவது என்பது தமிழர்களின் செயல்பாடுகளிலேயே தங்கியுள்ளது. தமிழர் உரிமைச் செயல்பாட்டாளர்களும் அமைப்புக்களும் வருடத்தில் வெறுமனே ஓரிரு கோரிக்கை மனுக்களை அனுப்புவதுடன் மட்டும் நிற்காமல் அதற்கான அறிக்கைகளை ஐ.நா வின் சிறப்பு அறிக்கையாளர்கள் *(Special Procedures)* மற்றும் ஒப்பந்த அமைப்புக்கள் *(Treaty Bodies)* ஆகியவற்றிற்கு எம்மால் முடிந்தளவு அதிகமாக அறிக்கைகளை தொடர்சியாக சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில் அவர்களின் அறிக்கைகளின் தொகுப்பாகத்தான் ஆணையாளரின் அறிக்கை தயாரிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் தமிழர் இயக்கமாகிய நாம் எமது இணை அமைப்புக்களுடன் இணைந்து பல நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் எம்மால் இயன்றளவில் அறிக்கைகளை அனுப்பி வைத்திருந்தோம். ஆனால் எமக்கு சகல தமிழ் தரப்பினரும் உரியவகையில் கூடியளவில் ஒத்திழைத்திருந்தால் இன்னும் அதிகமான அறிக்கைகளை சமர்ப்பித்திருக்க முடியும். அதனூடாக ஆணையாளரின் அறிக்கையை தற்போதையதை விட இன்னும் பலமானதாக ஆக்கியிருக்க முடியும். அதேவேளை முதற்தடவையாக ஐ.நாவின் அறிக்கைகளில் தமிழர்களுக்கு பிரச்சினை நடைபெற்றிருக்கின்றது என நான்கு தடவைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ் மாற்றம் கூட களச் செயல்பாடுகளை நாம் உரியவகையில் ஆழமாக முன்னெடுத்தமையினாலேயே ஏற்பட்டுள்ளது. அத்துடன் சிறீலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்வது பற்றி நாடுகள் சிந்திக்க வேண்டும் என அறிக்கையின் முடிவுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம் →

# உடைகிறது கோட்டாவின் இராணுவ வேலி



சஞ்ஜயன்

சிறீலங்கா சனாதிபதி கோட்டாபய ராசபக்ச எதனைத் தனது பலமாக எண்ணிக் கொண்டிருந்தாரோ, அதுவே இப்போது அவரது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக மாறியிருக்கிறது. 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, கோட்டபய ராசபக்ச தன்னைச் சுற்றி ஒரு இராணுவ வேலியை அமைக்கத் தொடங்கினார்.

முன்னாள் இராணுவ அதிகாரிகளையும், சேவையில் உள்ள இராணுவ அதிகாரிகளையும், முக்கிய சிவில் நிர்வாகப் பதவிகளில் நியமித்தார். இன்று வரை அது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியில், மக்களை விட இராணுவத்தினருக்கே முன்னுரிமை கொடுக்கப் படுகிறது. அரசு நிர்வாகத்தில் தொடங்கி, கொரோனா தடுப்பூசி வரையில் அதுதான் நிலைமை. இந்தியா கொடுத்த 3 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளில் பாதி, இராணுவத்தினருக்குத் தான் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டியவில் உள்ள இராணுவ வைத்தியசாலையில்–முதன் முதலில் கேணல் சவீன சேமகே என்ற இராணுவ அதிகாரிக்கே தடுப்பூசி செலுத்தப்பட்டது. எல்லாமே இராணுவ மயப்படுத்தப்பட்ட ஒரு நாடாக சிறிலங்கா மாறி வருகின்ற நிலையில் தான், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வெளிவந்திருக்கிறது. வரும் பெப்ரவரி 22ஆம் திகதி ஜெனிவாவில் தொடங்கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். இந்த அறிக்கையில் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கு அவர் பரிந்துரைத்துள்ளார்.

அத்துடன், நம்பகமான போர்க்குற்றச்சாட்டுகள் உள்ள இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உறுப்பு நாடுகளிடம் அவர் பரிந்துரைத்திருக்கிறார். இந்தப் பரிந்துரைகளை அவர் முன்வைப்பதற்கு முக்கியமான காரணம் சிறிலங்கா அரசாங்கம் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், நீதி தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியிருப்பது தான். இனிமேலும் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படப் போவதில்லை என உறுதிப்படுத்தப்பட்டு விட்ட நிலையில் தான் அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள், இராணுவ மயமாக்கல், உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும் அவர் தெளிவாக பட்டியலிட்டுத் தான் இந்தப் பரிந்துரைகளைச் செய்திருக்கிறார். இதில் முக்கியமாக அரச நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

கோட்டாவின் அரசாங்கத்தில் 28 இராணுவ மற்றும் புலனாய்வு அதிகாரிகள் அரச நிர்வாகப் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஜனநாயக நாடு ஒன்றில் சிவில் நிர்வாகம் இராணுவ மயப்படுத்தப்பட்டு வருவதற்கு இதற்கு மேல் உதாரணம் தேவைப்படவில்லை. கொரோனா தடுப்புச் செயலணி தொடக்கம், தொல்பொருள் முகாமைத்துவ செயலணி வரைக்கும் இராணுவ அதிகாரிகளிடம் தான் உள்ளன. பாதுகாப்பு செயலாளர் பதவி தொடக்கம் விவசாய அமைச்சின் செயலாளர் பதவி வரை இராணுவ அதிகாரிகளிடமே இருக்கிறது.



இவ்வாறான நிலையில், கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் ஒரு இராணுவ அதிகாரத்துவ ஆட்சிக்குள் சென்று கொண்டிருப்பதையே தெளிவாகப் புலப்படுத்தியிருக்கிறது. இதனை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மட்டுமன்றி சர்வதேசமும் அச்சத்துக்குரிய அச்சுறுத்தலுக்குரிய விவகாரமாக பார்க்கின்றது. போருக்குப் பின்னர், மீறல்களில் தொடர்புடைய படையினர் களையெடுக்கப்பட்டு, பாதுகாப்புக் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பலமுறை வலியுறுத்தியிருந்தார். அதற்கான சில முன்மொழிவுகளும் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்த போதும், தற்போதைய அரசாங்கம் அதையெல்லாம், குப்பைக் கூடைக்குள் போட்டு விட்டது. அதற்கு மாறாக, போர்க்குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் படை அதிகாரிகளை முன்னிலைப்படுத்தி வருகிறது.

இறுதிப்போரில், 53 ஆவது டிவிசனுக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் கமல் குணரத்ன பாதுகாப்புச் செயலராகவும், 58 ஆவது டிவிசனுக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளதை தீவிரமான கரிசனைக்குரிய விடயமாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இவர்களுக்கு எதிராக, ஐ.நாவின் விசாரணை அறிக்கைகளில், நம்பகமான குற்றச்சாட்டுகள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறானவர்கள் நாட்டின் பாதுகாப்புத் துறையின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை ஐ.நாவுக்கு விடப்பட்டுள்ள சவாலாகவே கருதப்படக் கூடியது. அதுமாத்திரமன்று, இறுதிக்கட்டப் போரில் பங்கெடுத்த, போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று அறிவிக்கப்பட்ட பல படை அதிகாரிகள் தான் இப்போது. உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அடுத்த நிலையில் உள்ள மேஜர் ஜெனரல் சேனாரத் பண்டார, சீனாவிலும், பாகிஸ்தானினும் பயிற்சி அளிக்கப்பட்டவர். “ரெட் அரோ” எனப்படும், டாங்கி எதிர்ப்பு ஏவுகணைப் பயிற்சிகளை பீஜிங்கில் பெற்றவர். இறுதிப் போரில் 57–2 பிரிகேட்டுக்கு தலைமை தாங்கிய இவர் தான், இப்போது இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பொது அதிகாரிகளின் தலைமை அதிகாரியாக,

தொடர்ச்சி 12ஆம் பக்கம் →

சமகால தமிழ்த் தேசியப்பரப்பில் தமிழரின் உரிமை சார்ந்த விடயங்கள் கேள்விக்குள்ளாகின்றபோது உடன் களத்திக்குச்சென்று குரல் கொடுப்பவர்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியுமான சுகாஸ் அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவராகக் காணப்படுகின்றார். தமிழரின் உரிமை சார்பான நீதிமன்ற வழக்குகளிலும் ஆஜராகி பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்து வருபவர் குருந்தூர் மலை வழக்கு, வெடுக்குணாறி சிவன் ஆலய வளக்கு, பழைய செம்மலை நீராவியடிப்பிள்ளையார் ஆலய வழக்கு உள்ளிட்டவற்றிலும் நீதிமன்றத்தில் ஆஜராகி நீதிக்காகவும், உரிமைக்காகவும் குரல் கொடுப்பவர். அவர் தற்போதய நடப்பு விவகாரங்கள் தொடர்பாக உரிமை இதழின் கேள்விகளுக்கு பதில் வழங்கினார்.

# விக்னேஸ்வரன் அவர்கள் சிந்திக்கும் திறனை இழந்து விட்டாரா?

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி சுகாஸ் செவ்வி



**வடக்கு, கிழக்கு மாணவர்கள் இராணுவப் பயிற்சியை பெற வேண்டும்! என்று சி.வி. விக்னேஸ்வரன் பகிரங்க அறிவிதுள்ளாரே இது பற்றி?**

உண்மையில் விக்னேஸ்வரன் ஐயா அவர்களுடைய கருத்தை கேட்டதிலிருந்து அதிர்ச்சியும், ஆச்சரியமும், வேதனையும் அடைந்தோம் என்பது தான் உண்மை ஏனென்றால் இத்தகைய ஒரு கருத்தை கூறுகின்ற அளவுக்கு விக்னேஸ்வரன் ஐயா சிந்திக்கும் திறனை இழந்து விட்டாரா? அல்லது திரைமறைவில் இருந்துகொண்டு இத்தகைய கருத்தை கூறுமாறு அவரை யாராவது தவறாக வழிநடத்துகிறார்களா என்று பல விதமாக யோசிக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கின்றோம் . எது எப்படி இருந்தாலும் இவருடைய கருத்தை நாங்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்மக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.



ஈழத்தமிழர்களுக்கு காத்திரமான நீதியும், தீர்வும் என்று நாங்கள் கூறுவது ஈழத் தமிழர்களுடைய இனப்பிரச்சினைக்கும், ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படுகொலை எங்களுக்கு ஒரு காத்திரமான தீர்வு சர்வதேச விசாரணையின் வாயிலாக கிடைக்கப் பெறுகின்ற வரை இனப்படுகொலை புரிந்த ராணுவத்திடம் இருந்து பயிற்சியை ஒருபோதும் பெற முடியாது இது குறித்து சிந்திப்பதே வரலாற்று துரோகம் எனவே தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து திரு விக்னேஸ்வரன் அவர்கள் தான் கூறிய கருத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான உங்கள் கருத்து என்ன?**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் ஈழத்தில் அரங்கேறிய விவகாரங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்ற விடயம் உண்மையில் வரவேற்கக்கூடிய ஒரு விடயமாகவும் இதைத்தான் கடந்த 10 ஆண்டுகளாக 2010 முதல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். நாங்கள் இந்த விடயத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த பொழுது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை பார்ப்பது சாத்தியமில்லை என்றும் நாங்கள் அசாத்தியங்களுக்கு கனவுகாண்கின்றோம் என்றும் பூகோள அரசியல் என்று மக்களின் காதுகளில் பூ சுற்றுகின்றோம் என்றும் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்று பொய்களையும் விமர்சனங்களையும், ஏளனங்களையும் பரப்பி மாற்றானின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்தவர்களுக்கும், அவர்களின் கருத்துக்களால் ஏமாற்றப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கும் இந்த அறிக்கையை பொறுப்போடு சமர்ப்பிக்கின்றோம்.

**ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அமைத்துள்ள ஆணைக்குழு தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ன?**

பாதுகாப்புச் செயலாளராக இருந்து யுத்தத்தை வழி நடத்திய தற்போதைய சனாதிபதியால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதன் உள்நோக்கத்தை தமிழ் சமூகத்தையும் கடந்து அனைத்துலக சமூகம் நன்கு அறியும். இந்த ஆணைக்குழு வழமைபோல சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் மனித உரிமைகளுடன் தொடர்புபட்ட பன்னாட்டு மற்றவர்களை ஏமாற்றுவதற்காகவும், காலத்தை கடத்துவதற்காகவும் சர்வதேச அழுத்தங்களிலிருந்து இலங்கையை தற்காலிக மாகவேனும் கொஞ்ச காலத்திற்கு என்றாலும் காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்ட ஒரு ஆணைக்குழு தான் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு ஆகவே இந்த ஆணைக்குழு பற்றி நாங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளக்கூடாது அதைப்பற்றி கருத்தில் எடுக்காமல் எங்களுடைய ஈழத்தமிழர்களுக்கு நீதி கேட்கின்ற செயற்பாடுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கி நகர்த்துவதற்கான பணிகளை முழுமூச்சாகவும் வீச்சாகவும் ஈழத் தமிழர்களும் உலகத் தமிழர்களும் முன்னெடுக்க வேண்டும்.

**தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அறிக்கைகளில் இனப்படுகொலை என்ற வசனம் பாவிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டினை சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் முன்வைத்துள்ளார்**

இது அப்பட்டமான படு பொய்யான தொரு குற்றச்சாட்டு இந்தக் குற்றச்சாட்டினை சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் முன்வைத்துள்ளதன் வாயிலாக அவர் தொடர்பாக எங்களுக்கு இருந்த கொஞ்சநஞ்ச எஞ்சியிருந்த மரியாதைகளும் இல்லாமல் போகின்றது என்றால் இனப்படுகொலை என்ற விடயத்தை 2010 முதல் இன்றுவரை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற ஈழத்திலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரே ஒரு தமிழ் தேசிய தரப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி மத்திரமே காணப்படுகின்றது அது மாத்திரமில்லாமல் இந்த தமிழ் கட்சிகளை ஒன்று கூடல் பங்கு பற்றியவன் என்ற வகையில் மிகவும் பொறுப்போடு கூறுகின்ற விடயம் குறித்த சந்திப்புகளில் சந்திப்புகளின ஆரம்பம் தொட்டு இறுதிவரை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இனப்படுகொலை என்ற விடயத்தை உள்ளடக்குவதிலும் . சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதிலும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம் →

# சிறீலங்கா சுதந்திரதினம் தமிழின அழிப்பு துவங்கிய நாள்



தீபச்செல்வன்

1948ஆம் ஆண்டு சிலோன் என்று அழைக்கப்பட்ட சிறீலங்காவுக்கு பிரித்தானியர்கள் சுதந்திரம் வழங்கினர். ஆனால் அன்றைய நாள் ஈழத் தமிழ் மக்கள் சிறீலங்கா அரசால் இன்னொரு காலனித்துவ அரசாக அடிமை கொண்ட நாளாகும். அத்துடன் அந்த நாளில் இருந்தே தமிழின அழிப்பும் துவங்கப்பட்டது. ஈழத் தமிழ் மக்களாகிய எம்மைப் பொறுத்தவரை எம்மை புறக்கணித்த, எம்மை ஒடுக்கிய, எம்மை இன அழிப்பு செய்கின்ற திட்டமிட்ட செயல்களால் இந்த நாள் கரி நாளாகிறது. சிங்கள இனத்திற்கு சுதந்திர தினமாகவும் இன்னொரு இனமாகிய ஈழத் தமிழர்களுக்கு இந்த தினம் துக்க தினமாகவும் அமைகிறது. இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அரச செயலகங்களில் மாத்திரம் அநாதரவாக சிங்கக் கொடிகள் பறப்பதைக் காணலாம். அத்தோடு இராணுவ முகாங்களிலும் சிங்கக் கொடிகள் பறக்கின்றன. ஒரு தமிழ் குடியானவரின் வீட்டிலும் இந்தக் கொடியைக் காணமுடியவில்லை. வவுனியாவை தாண்டி சென்றால் மதவாச்சியிலிருந்து சிங்கக் கொடிகள் பறப்பதைக் காணலாம். ஏன் தமிழ் நிலத்தில் தமிழ் குடியானவரால் ஒரு இலங்கைக் கொடியும் ஏற்றப்படவில்லை? இந்தக் கேள்வியும் அதற்கான விடையும் இந்த தீவின் பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் பதிலுத்துபவை.

தமிழில் இலங்கை தேசிய கீதத்தை பாடலாம் என்று சிறீலங்காவின் முன்னைய ஆட்சியாளர்கள் சொன்ன போது இன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ச அதனை எதிர்த்தார். இப்போது அந்தக் கதை ஏதுமில்லை. ஆட்சியை கைப்பற்றுகிற வரை தமிழ் தேசிய கீதம் சிக்கலாக இருந்தது. வடகிழக்கு மக்களின் சுதந்திரத்தை மறைத்துக்கொண்டு அவர்களின் உரிமைகளை பேரினவாதத்திற்குள் குவித்துக் கொண்டு, கடந்த காலத்தில் நடந்த அநீதிகளுக்கு நீதியை வழங்காமல் மேற்கொண்ட குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறாமல் இலங்கை தேசிய கீதத்தை சிங்களத்தில் படித்தால் என்ன? தமிழில் படித்தால் என்ன?

இலங்கை தேசிய கீதத்தில் என்ன சொல்லப்படுகிறது என்பதை அறியாத போதும் அது எப்படிப்பட்ட செயல்களின் போது இசைப்படுகிறது என்பதால் அதை வெறுத்தோம். எதுவுமே சமத்துவமற்ற நாட்டில் சமத்துவம் விளங்குவதைப்போல் ஒரு தேசிய கீதத்தை படிப்பதே ஒடுக்குமுறையை மறைக்கும் உத்தி. அதனால் தனித் தேசத்திற்காக போராடிய தமிழ் மக்கள் சிங்கள தேசிய ஒற்றை ஆட்சியின் தேசிய கீதத்தை பாட மறுத்தனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் பிறந்து வளர்ந்த வேளையில் வருடா வருடம் தரப்ப்படும் சிறிலங்கா அரச பாடப்புத்தகங்களில் உள்ள தேசியகீதத்தை ஒருபோதும் நான் படித்ததில்லை. யாரும் அது குறித்து எதுவும் கூறவில்லை.

நாங்கள் அந்தப் பாடலை பாட மறுத்தோம். ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலை யுத்தத்தின் பின்னர் அழிக்கப்பட்ட எங்கள் இனத்தின்மீது வெற்றிப்பாடலாக ஒலித்ததும் இந்த தேசிய கீதமே. இன்றைக்கு முள்ளிவாய்க்காலின் பின்னர் சில அரச நிகழ்வுகளில் இலங்கை தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. ஒரு நாட்டின் தேசிய கீதம் என்பது அரச நிகழ்வுகளில் மாத்திரம் இசைக்கப்படுவதல்ல. அது மக்களின் நெஞ்சில் இசைக்கப்படுவது. தமிழ் மக்களின் நெஞ்சில் அந்நியமான பாடலை தமிழில் இசைத்தால் என்ன? சிங்களத்தில் இசைத்தால் என்ன?

ஈழத் தமிழ் மக்கள் கொத்துக்ககொத்தாக இனப்படுகொலை செய்யப்பட்டபோது அவர்களின் பிணங்களின்மீது வெற்றிக் கொடிகளாக பறந்த சிங்கக் கொடிகள் எமது தேசியகொடியாக எப்படி இருக்கும்? இந்தக் கொடியுடன்தான் எம்மீது படையெடுத்து வந்தனர். இந்தக் கொடியுடன்தான் எங்கள்மீது குண்டுகளை வீசினர். எங்களை தனது பிரஜைகளாக எங்களுக்கு சமத்துவத்தை வழங்காத கொடி எங்களை அழித்து அதன்மீது ஏற்றப்படுகிறது. இலங்கை அரசாங்கம் பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்ற நாளில் ஈழத் தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாத ஆதிக்கரிடம் வீழ்ந்தனர். ஒன்றுபட்ட இலங்கையின் சுதந்திரத்திற்காக போராடிய ஈழத் தமிழ் தலைவர்கள் நாட்டை பிரித்தெடுக்காமல் முன்னேறும் வாய்ப்பை வழங்கியபோது சிங்களப் பேரினவாதிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி ஈழத் தமிழர்களின் உரிமைகளையும் தமது ஆதிக்கத்தில் வைத்தனர்.

அப்படிப்பார்த்தால் இன்றைய நாள் ஈழத் தமிழர்கள் உரிமையை இழந்த நாள், ஈழத் தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்ட நாள். இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டதுடன் இலங்கைப் பிரஜைகள் என்பதற்கான அடையாளங்களும் மறுக்கப்பட்ட நாள். இதனால் இன்று நேற்றல்ல வரலாறு முழுவதும் இலங்கையின் சுதந்திர தினத்தை ஈழத் தமிழர்கள் ஒரு கறுப்பு நாளாகவே நினைவுகூர்ந்து வந்துள்ளனர். யுத்தத்தின்போது பிள்ளைகளை இழந்தவர்களுக்கும் தமது உறவுகள் காணாமல் போகச் செய்யப்பட்ட அனுபவத்தை சுமந்தவர்களுக்கும் இது சுதந்திரதினமா? இலங்கை அரச இலட்சினையை நம்பி சரணடைந்தார்கள், பலர் தமது பிள்ளைகளை கையில் பிடித்துக் கொடுத்தார்கள். அவர்களையும் காணவில்லை என்று இலங்கையின் அரசு கை விரித்தது. அன்றைக்கு கையில் கொடுத்த பிள்ளைகளை தனது பிரஜைகளாக இலங்கை அரசு கருதியிருந்தால் அவர்கள் காணாமல் போயிருப்பார்களா? கையில் கொடுத்த பிள்ளைகளை ஒரு அரசு தனது பிரஜைகளை காணாமல் போய்விட்டனர் என்று கை விரிக்குமா?

இலங்கை அரசாங்க கட்டமைப்பு ஈழத் தமிழ்மக்கள்மீது மிகவும் ஆழமான அந்நியத்தையும் அழிப்புணர்ச்சியையும் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுபோன்ற பல சம்பவங்கள் அதன் வெளிப்பாடுகளாக வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. இலங்கை அரசியல் கட்டமைப்பின் அடிப்படை என்பது தமிழர்களை எப்படியும் நடத்தும் அடிமையையே கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் சிறீலங்கா சுதந்திரத்தின தினத்தை கொண்டாடும்படியும் ஈழ மக்களை சிங்கள அரசினர் அடிமைப்படுத்தினர். மக்களை வற்புறுத்தினார். இராணுவத்தினர் எங்கள் வீடுகளிலும் கடைகளிலும் இலங்கைக் கொடியை பறக்கவிட்டனர். இராணுவத்தை வைத்து சுதந்திரதினம் கொண்டாட வற்புறுத்தி அதையும் ஒரு இராணுவ நடவடிக்கையாக செய்பவர் மகிந்த ராஜபக்ச. இங்கு சுதந்திரதினம் என்பது அடிமை தினமே. அரச அலுவலகங்களில் மாத்திரம் கொண்டாடப்படுவது சுதந்திரதினம் அல்ல. அரச உயர் பதவிகளில் வகிப்போர் தமது இருப்பை தக்க வைக்க சிங்கக் கொடியை ஏற்றுகின்றனர். தமிழ் மக்கள் என்ற வகையில் மிகவும் ஆமான வெறுப்போடு அக்கொடியை ஏற்றும் பலரை பார்த்திருக்கிறேன். ஏற்ற மறுக்கும் அரச அதிகாரிகள் பலரும் உண்டு.

தொடர்ச்சி 12ஆம் பக்கம் →

6 ஆம் பக்கம் தொடர்ச்சி →

# சிறீலங்காவை அனைத்துலக குற்றவியல்...

மாறாக இவ்விடயம் உறுப்பு நாடுகளுக்கான கோரிக்கைகளில் இடம்பெற்றிருந்தால் இன அழிப்பிற்குள்ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆறுதலாக இருந்திருக்கும். மேலும் பாலஸ்தீனம்,மேற்கு சகாரா போன்ற விடுதலைக்காக போராடும் இனங்களின் பிரதேசங்களை ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் என குறிப்பிடும் அளவிற்கு எமது விடயத்தில் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தமிழீழம் என இதுவரை எந்த அறிக்கையிலும் குறிப் பிடப்படவில்லை. இந் நிலைமைகளை மாற்றுவதற்கான செயல்பாடுகளை முன்னெடுப்பதனை விடுத்து நம்மவர்களில் பலர் விமர்சகர்களாகவும் சமூகவலைத்தளங்களில் கருத்துச் சொல்பவர்களாகவும் மட்டுமே இருக்கின்றார்கள். அதனை மட்டும் செய்யாமல் களச் செயல்பாடுகளை உரியவகையில் முன்னெடுப்பதன் ஊடாகவே இவ்வாறான அறிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

ஏன் நான் இந்த விடயங்களை குறிப்பிடுகிறேன் என்றால் நாம் முன்னெடுக்கும் செயல்பாடுகள் ஆழமானதாக இருக்க வேண்டும். அந்தவகையில் குறிப்பாக இந்த வருட தொடக்கத்திலேயே தாயகத்தில் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்கள் மீது திட்டமிட்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வாறான சம்பவங்களை ஐ.நா மற்றும் பன்னாட்டு பொறிமுறைகளுக்குள் கொண்டு சேர்க்கும் முயற்சிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் ஆணையாளரின் இந்த அறிக்கை 100 வீதம் தமிழர்கள் திருப்திப்படும் அளவிற்கு இருக்கின்றது என சொல்ல முடியாது ஆனால் வழமையாக வெளிவரும் அறிக்கைகள் 60 வீதம் தமிழர் தரப்புக்கு திருப்தி அளிக்கும் வகையில் இருக்குமெனில் இந்த அறிக்கை 75 வீதம் அளவில் திருப்திதரக்கூடியதாக இருக்கின்றது. அதனை இன்னும் 100 வீதம் பலமானதாக கொண்டு வருவதற்கு தமிழ் சமுதாயம் ஐ.நா வின் பொறிமுறைகளுக்குள் உரியவகையில் ஆழமாக செயல்பாடுகளை முன்னெடுத்தால் அதனை சாத்தியப்படுத்தலாம்.

**எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட இருக்கும் இலங்கை குறித்த புதிய தீர்மானம் தொடர்பில் தங்கள் கருத்து?**

எதிர்வரும் மார்ச் மாதம் 46 வது மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படும் தீர்மானம் தொடர்பில் கடந்த செம்டெம்பர் மாதம் இராசதந்திர மட்டங்களில் இடம்பெற்ற முறைசாரா கூட்டங்களின் ஊடாகவும் மற்றும் நவம்பர் மாதம் நியூயோர்க்கில் இடம்பெற்ற கூட்டங்களின் ஊடாகவும் பிரித்தானியா தான் அதனை முன்மொழிய போகின்றது என்பது தமிழர் இயக்கமாகிய எமக்கு தெரிந்த விடயம். ஏனெனில் மேற்குலக நாடுகள் இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுக்கான பொறிமுறைகளினை கையாளும் பொறுப்பினை பிரித்தானியா மற்றும் கனடாவிடமும் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால் இவ் நாடுகள் ஒரே விடயத்தினை இரண்டு விதமாக கையாளுகின்றன. அதாவது றோகிங்கியா மக்களின் அமைப்புக்களுக்கு தேவையான பொருளாதார ஆதரவுகளை வழங்கி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குகளை பதிவுசெய்வதற்கு பெரியளவில் ஆதரவு வழங்கிய நாடுகளில் கனடாவிற்கும் பிரித்தானியாவிற்கும் பங்கு இருக்கின்றது. ஆனால் எங்களுடைய விடயத்தில் மாத்திரம் தமிழர்கள் மத்தியிலும் தமிழர் பிரதிநிதிகளை சந்திக்கும் போது மாத்திரம் நாங்கள் உங்களுக்கு ஆதரவு நாங்கள் உங்களுடைய தைப்பொங்கலை கொண்டாடுகிறோம் என வேட்டி கட்டிக் கொண்டு கனடா அதிபர் பொங்கல் கொண்டாடும் அளவிற்கு நிலமை இருக்கிறது. இவ்வாறான வெளிப்பாடுகள் ஊடாக தமிழர்களை நவீன ரீதியாக ஏமாற்றும் உத்தியை இவ் நாடுகள் கையிலெடுத்திருக்கின்றன. அதில் பார்த்துக் கொண்டீர்களென்றால் எந்த விதத்திலும் தமிழர்களுக்கு நடைபெற்ற இன அழிப்பிற்கான நீதிக்கான பொறிமுறையினை இந்த நாடுகள் முன்னெடுக்கவில்லை. இதற்கு ஒரு உதாரணம் கடந்த ஐந்து வருடங்களாக றோகிங்கியா மக்களின் பிரச்சினையை எடுத்துக் கொண்டீர்களென்றால் பிரித்தானியா மற்றும் கனடா போன்ற நாடுகள் அவர்கள் சார்ந்த அறிக்கைகளை வாசிக்கும் போது அதில் யார் பாதிக்கப்படுகிறார்கள் அதாவது றோகிங்கியா மக்கள் எனவும் அவர்களுடைய தாயகமான ரக்கிங் இற்குள் பாதிக்கப்படுகிறார்கள் என குறிப்பிடப்படுகிறது. ஆனால் இலங்கை தொடர்பான கலந்துரையாடல்களை எடுத்துக்கொண்டால் அதில் பாதிக்கப்பட்டவர்கள் யாரென்பதையும் அவர்கள் எங்கே பாதிக்கப்பட்டார்கள் என்பதனையும் குறிப்பிடவில்லை அதாவது தமிழர்கள் தமிழீழத்தில் பாதிக்கப்பட்டார்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக இலங்கையில் சமுதாயங்கள் பாதிக்கப்படுகின்றன என ஏமாற்றும் விதமாக பேசுவதோடு விட்டுவிடுகிறார்கள். அந்தவகையில் கடந்தகாலத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைப் போலவே இனியும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட இருக்கின்றது. ஆனால் தமிழர் இயக்கமாகிய நாம் இணை அனுசரனை நாடுகளின் பிரதிநிதிகள் அதனோடு பன்னாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பிரதிகள் என அனைவருக்கும் குறிப்பாக தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் தேசம் என மூவாயிரத்திற்கு மேற்பட்ட அமைப்புக்களின் ஆதரவுடனான எமது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்தும் அனுப்பிக் கொண்டே தான் இருக்கின்றோம். அந்த கோரிக்கை மனுக்களின் ஊடாக இவ் நாடுகளின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்படலாம் என சிறிது நம்புகின்றோம். ஆனால் இச் செயல்பாடுகளை தமிழர்களாகிய நாம் இன்னும் ஆழமாக மும்னெடுப்போமாக இருந்தால் பாரியளவிலான மாற்றங்களை கொண்டுவரலாம். எவ்வாறெனில் நாம் தனியே மனித உரிமைகள் பேரவைக்குள் மட்டும் நிற்காமல் தமிழர் இயக்கமாகிய நாம் எவ்வாறு ஐ.நா பொதுச்சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வரை செயல்பாடுகளை முன்னெடுக்கின்றோமோ அதேபோல மற்றைய அமைப்புக்களும் யெனிவாவிற்குள் வந்து நின்று தேநீரகத்தில் ஒரு சில இராதந்திரிகளை சந்தித்துவிட்டு மாத்திரம் செல்லாது தமிழர் தரப்பு கோரிக்களை உலக தரத்திற்கு கொண்டு செல்வதற்கான செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன் வரவேண்டும். உலக தரமென்றால் ஐ.நா பொதுச்சபை மனித உரிமைகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய பன்னாட்டு அரசியல் தளங்களிற்குள் சென்று செயல்படுவதற்கான அனுமதிகள் எங்களிடம் இருக்கின்றது. அந்த வாய்ப்புக்களை பயன்படுத்தி செயல்பட முன்வந்தார்க ளென்றால் அவ் தீர்மானங்களை தமிழர்களுக்கான நீதிகேட்கும் பொறிமுறைக்குள் கொண்டுவர வைக்கலாம்.

**சிறீலங்காவை மனித உரிமை பேரவையிலிருந்து ஐ.நா பாதுகாப்பு சபை மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது சாத்தியமா?**

முதலாவது மனித உரிமைகள் பேரவையில் தமிழரின் பிரச்சினை தொடர்ந்து இருக்க வேண்டும் ஏனெனில் பாதிக்கப்பட்ட தரப்பினர் முறைப்பாடுகளை பதிவுசெய்ய வேண்டிய இடங்களாக மனித உரிமைகள் பேரவையும் குற்றவியல் நீதிமன்றம் ஆகியனவே இருக்கின்றன. அதேவேளையில் தமிழர் பிரச்சினை மனித உரிமைகள் பேரவையில் விவாதிக்கப்படும் விடயமாக இருக்கும்போதே பாதுகாப்புச் சபைக்கும் குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கொண்டு செல்ல முடியும். உதாரணமாக றோகிங்கியா மக்களின் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் மனித உரிமைகள் பேரவையில் எமது பிரச்சினை போல தனியே ஒரு பிரிவில் அல்லாது பிரிவு 2,4,10 ஆகியவற்றின் கீழ் விவாதிக்கப்படுகின்றது. ஆனால் எமது பிரச்சினையை எடுத்துக் கொண்டால் தனியே பிரிவு 2 கீழ் மட்டுமே விவாதிக்கப்படுகிறது. அதுவும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கால அவகாசம் கொடுக்கும் போது மட்டும் ஒரு கலந்துரையாடல் நடைபெறுகின்றது. அதனை மாற்ற வேண்டுமாக இருந்தால் முதலில் தமிழ் சமுதாயம் மனித உரிமைகள் பேரவையின் பிரிவு 4 இன் கீழ் இலங்கைக்கான விசேட பிரதிநிதி ஒருவரினை நியமிப்பதற்கு கனடா பிரித்தானியா பிரான்ஸ் போன்ற மேற்குலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். பிரதானமாக மேற்குலக நாடுகளினால் இலங்கை சார்ந்த விடயத்தினை கையாளும் பொறுப்பு கனடா மற்றும் பிரித்தானியாவிடமுமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் இந்த இரு நாடுகளிடமும் இலங்கை சார்ந்து ஒன்றல்ல இரண்டு தீர்மானங்களை கொண்டுவரச் செய்ய வேண்டும். இரண்டாவது தீர்மானம் என்னவெனில் நாடுசார்ந்த ஒரு விசேட பிரதியை பிரிவு 4 இன் கீழ் நியமிப்பது. அதனை செயற்படுத்தினால் மனித உரிமைகள் பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் எங்களுடைய பிரச்சினை ஒன்றரை மணித்தியாலத்தில் இருந்து மூன்று மணித்தியாலங்கள் வரை விவாதிக்கப்படும் ஒரு விடயமாக வரும். இதுவரை எடுத்துக்கொண்டால் பத்து நாடுகள் சார்ந்த விசேட பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். அந்த பத்து நாடுகள் சார்ந்த விசேட பிரதிநிதிகளையும் தமது நாட்டுக்கு எதிராக நியமிக்கப்பட்டார்களோ குறிப்பிட்ட அந்த பத்து நாடுகளுமே ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் அந் நாடுகள் தொடர்பாக விவாதித்துக்கொண்டே இருக்கிறார்கள். உதாரணமாக ஈரான் நாட்டினை எடுத்துக்கொண்டால் பலம் பொருந்திய அந் நாடிற்கு எதிராகவே ஒரு விசேட பிரதியை நியமித்து அவர்களுடைய பிரச்சினை தொடர்ந்தும் விவாதிக்கப்படுகின்றது. இதே போலவே சிரியா மற்றும் சில ஆபிரிக்கன் நாடுகளுக்குமான விசேட பிரநிதிகள் இருக்கின்றார்கள். இவ்வாறிருக்கும் போது எங்களுடைய பிரச்சினைக்கும் மட்டும் அதனை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாது எனக்கூறி தட்டிக்கழிக்கிறார்கள். ஆனால் அதனை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை தமிழர்களாகிய எமது பிரச்சினையை தொடர்ந்தும் விவாதிக்கச் செய்வதற்கான முயற்சியை அனைத்துலக சமூகம் வேண்டுமென்றே மூடிமறைக்கின்றது. தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் அதுசார்ந்து சரியான வகையில் உள்வாங்கி அவ் பொறிமுறையினை செயற்படுத்துவதற்கு முன் வரவேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கு மூன்று வழிமுறைகள் உள்ளது ஒன்று ரோம் உடன்படிகையில் குறிப்பிட்ட நாடு கையொப்பமிட்டிருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் வழக்கு தொடரலாம். இரண்டாவதாக பாதுகாப்புச்சபையின் ஊடாக கொண்டு செல்லுதல். மூன்றாவது வழியாக குறிப்பிட்ட நாடு ரோம் உடன்படிக்கையில் கையொப்பமிடவில்லை என்றாலும் பாதிக்கப்பட்ட மக்கள் ரோம் உடம்படிக்கையில் கையொப்பமிட்ட நாடு ஒன்றில் வாழ்ந்தால் அவர்கள் ரோம் மையொப்பமிடாத நாட்டிற்கு எதிராக வழக்கினை தொடரலாம். உதாரணமாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திடாத சிறீலங்கா அரசின் பிரதிநிதிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். அதேவேளை பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வது சாத்தியப்படும் எப்போதென்றால் மனித உரிமைகள் பேரவையின் சகல பொறிமுறைகளினையும் சரிவரப் பயன்படுத்தினோம் என்றால் தான் அது சாத்தியப்படும். முதலாவதாக பேரவையின் ஒன்பது ஒப்பந்த அமைப்புக்களுக்கும் ( treaty Bodies ) நாம் எமது முறைப்பாடுகளை பதிவு செய்ய வேண்டும். இரண்டாவதாக விசேட பிரதிநிதிகளை சரியான வகையில் பயன்படுத்த வேண்டும். இந்த இரண்டு தரப்பினரின் அறிக்கைகளுடன் பாதிக்கப்பட்ட தரப்பினராகிய தமிழ் சமுதாயம் வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வழங்கும் அறிக்கைகளினைக் கொண்டுதான் பாதுகாப்புச் சபைக்கு பரிந்துரைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றது. ஆனால் என்னைப்பொறுத்த வரையில் தமிழர்களாகிய நாம் இன்னும் 5 வீதம் கூட மனித உரிமைகள் பேரவையின் பொறிமுறைகளுக்குள் செயல்பாடுகளினை முன்னெடுக்கவில்லை. நாம் 100 வீதம் செயற்பட்டோமென்றால் எமது இலக்கினை அடைய முடியும்.

# அடுத்து கிளிநொச்சிக்கு வருகிறார் புத்தர்?



தமிழர்களின் பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்குடன் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புத்த விகாரைகளை அமைப்பதில் சிறீலங்கா அரசு தீவிரம்காட்டி வருகிறது. தொல்லியல் அடையாளங்களை அகழ்கிறோம் என்ற போர்வையில் இராணுவத்தின் துணையுடன் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து புத்த விகாரைகளை நிறுவி சிங்கள குடியேற்றங்களை அமைப்பதில் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. அண்மையில் முல்லைத்தீவில் குருந்தூர் பகுதி இலக்கு வைக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று யாழ்பாணத்தியில் தையிட்டியில் சிறீலங்கா இராணுவத் தளபதி நூறடி புத்தர் சிலைக்கு அடிகள் நடடினார். ஆக்கிரமிப்பின் தொடர்ச்சியாகவே தொடர்ந்து கிளிநொச்சி பக்கம் இலங்கை அரசின் கவனம் சென்றுள்ள நிலையில் உருத்திரபுரம் சிவன் கோவில் அகழ்வாராச்சிக்கான மதிப்பீடுகள் பூர்த்தி, ஆலய சூழலும் நேற்றைய தினம் பார்வையிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனிடையே முல்லைத்தீவு குருந்தூர்மலை மற்றும் படலைக்கல்லு ஆகிய பகுதிகளில் தொல்பொருள் ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கான பூர்வாங்கச் செயல்பாடுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அங்கு தமிழ் மக்களின் பூர்வீக அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளன என சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் தொல்லியல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் விகாரை அமைக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் அபாயமுள்ளது என சந்தேகங்களும் வெளியிடப் பட்டுள்ளன.

இந்நிலையில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளின் போது யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துறைசார்ந்தவர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு தமிழ் அரசியல், சிவில் பிரதிநிதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் தொல்லியல் துறை அதிகாரிகள் கலந்து கொள்ளும் முக்கிய கலந்துரையாடல் நாளை திங்கள்கிழமை நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தரப்பு துறைசார்ந்தவர்களை குருந்தூர்மலை அகழ்வாராய்ச்சிகளின் போது ஈடுபடுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

# எமது உறவுகள் கிடைக்கும் வரை

## சிறீலங்காவின் சுதந்திர தினம் துக்கத்தினமே




எதிர்வரும் சுதந்திர தினத்தை கரிநாளாகவே நாம் கடைப்பிடிக்கவுள்ளோம் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இலங்கையின் சுதந்திர நாளன்று, அடையாள உண்ணாவிரத போராட்டம் ஒன்றையும் முன்னெடுக்கவுள்ளதாக அச்சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது, “எதிர்வரும் சுதந்திர தினத்தை கரிநாளாகவே நாம் கடைப்பிடிக்கவுள்ளோம்.

அன்றையதினம் அடையாள உணவுத்தவிர்ப்பு போராட்டங்கள், திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையில் நான்காம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை நான்கு மணி வரை வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் அடையாள உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

குறித்த போராட்டத்திற்கு பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் மற்றும் தமிழ் தேசியத்திற்காக பாடுபடுகின்ற அனைவரும் ஒற்றுமையாக கலந்துகொண்டு, நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் எமது போராட்டத்தை மேலும் வலுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எமது உறவுகள் கிடைக்கும் வரைக்கும் சுதந்திரதினத்தை துக்கதினமாகவே நாங்கள் கடைப்பிடிப்போம்” என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்

# உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு 10.31 கோடியை தாண்டியது



கொரோனா வைரஸ் சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. வைரஸ் தொற்று பரவி ஏறத்தாழ 10 மாதங்கள் கடந்து விட்டாலும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை.

கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், ரஷ்யா, பிரிட்டன் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 10.25 கோடியைக் கடந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 7.47 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர். மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 22.27 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் பரவியவர்களில் 2.61 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 1.08 லட்சத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

# தமிழர் தாயகத்தை சிங்கள மயமாக்கும் இராணுவம்

## தையிட்டியில் புதிய விகாரை



தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம் வலி.வடக்கு பிரதேசத்தில் உள்ள தமிழர்களின் பூர்வீக கிராமமான தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று சிறீலங்கா இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு உள்ளூர் பிரதேச மட்டத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்ட நிலையில் நிரந்தக் கட்டடம் அமைக்க இடைக்காலத் தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைக்க நேற்று சிறீலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நடப்பட்டுள்ளது.தையிட்டி பெண்கள் காவலரனுக்கு அருகாமையில் இந்த விகாரை தனியார் காணியில் அமைக்கப்படவுள்ளது.

8 ஆம் பக்கம் தொடர்ச்சி →

## விக்னேஸ்வரன் அவர்கள் சிந்திக்கும்...

மிகவும் ஆணித்தரமாக வரும் உறுதியாகவும் வலியுறுத்திக் கொண்டிருந்தார். ஆனால்

சுரேஷ் பிரேமச்சந்திரன் சார்ந்த தரப்பினர் IIIM என்று சொல்லப்படக்கூடிய *international independent investigation mechanism* என்ற விடயத்தை வலியுறுத்தி இனப்படுகொலை என்ற விடயத்தையும் ,சர்வதேச விசாரணையையும் மழுங்கடிக்கின்ற வகையில் செயல்பட்டாலே தவிர கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவ்வாறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் செய்யப்படவில்லை இதற்கு கண்கூடாக கண்ட சாட்சியாக நான் இருக்கின்றேன்

அது மாத்திரமில்லாமல் சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைப்பது அவருக்கு புதிதல்ல என்றாலும் அவருடைய பின்னணி அப்படிப்பட்டது ஆரம்ப காலங்களில் ஒரு ஆயுதக் குழுவாக இயங்கிய அவர் அதன் பின்னர்

பல அன்னிய சக்திகளினுடைய கைக்கூலியாகவும். அதன் பிற்பாடு இலங்கையினுடைய முன்னாள் ஜனாதிபதியும் தற்போதய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களினுடைய அமைச்சின் மகிந்த ராஜபக்ச அவர்கள் மீன்பிடித் துறை அமைச்சராக இருந்தபொழுது அவருக்கு ஒரு செயலாளராகவும் இருந்தவர் இந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் அது மாத்திரமில்லாமல் மண்டையன் குழு என்க்றொரு குழுவை வைத்திருந்து தன்னுடைய சொந்த மக்களையே படுகொலை செய்த ஒரு நபர்தான் சுரேஷ் பிரேமச்சந்திரன் . ஆகவே இவருடைய கருத்தை நாங்கள் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை அதேநேரம் இவரைப் போன்றவர்களை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஒரு தமிழ்த் தேசிய அரசியல்வாதியாக கருதுவதை நிறுத்தி இவர்களை தமிழ்த் தேசியம் சார்ந்த பரப்பிலிருந்து ஒரு அரசியல் குரலாக இவர்களுடைய கருத்துக்களை செவிமடுப்பதை நாங்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

### தொல்லியல் ஆய்வு நடவடிக்கை என்ற போர்வையில் தமிழர் தாயகப் பகுதியில் தமிழர் நிலங்கள் அபகரிக்கப் படுவது

இதை நான் இலங்கையிலே ஈழத்தமிழர்களுக்கு எதிராக பன்னெடுங்காலமாக சிங்கள பௌத்த பேரினவாத அரசினுடைய அரசாங்கங்களால் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இன அழிப்பினுடைய- *structural genocide* ஒரு பாகமாக தான் பார்க்கின்றேன் ஏனென்றால்

தொல்லியல் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு தமிழர் தாயகங்களையும், தமிழருடைய பூர்வீக காணிகளையும் ஆக்கிரமிக்கின்ற அதேநேரம் அங்கிருந்து தமிழ் மக்களை அகற்றுகின்ற செயற்பாடுகள் வடக்கு, கிழக்குகெங்கும் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. தமிழர்களுடைய தாயகமான கிழக்கு மாகாணத்தினுடைய மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய எல்லையோர கிராமங்களான மாதவனை மற்றும் மயிலத்தமடு ஆகிய பகுதிகளிலிருந்து தமிழர்களுடைய மேய்ச்சல் தரைகளில் இருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர்களுடைம கால்நடைகள் வெட்டியும், சித்திரவதை செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது மாத்திரமில்லாமல் வடக்கிலே வவுனியாவில் வெடுக்கினாறி ஆதிசிவன் ஆலயம், முல்லைத்தீவிலே குருந்தூர் மலை ஆதி சிவன் அய்யனார் ஆலயம் ,யாழ்ப்பாணத்திலே கிளி காட்சியிலே எங்கும் எல்லா இடங்களிலும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க செயற்பாடுகளை தொல்லியல் திணைக்களம் முடுக்கி விட்டிருக்கின்றது இது திட்டமிட்ட வகையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பினுடைய ஒரு பகுதி என்பதில் மாற்றுக்கருத்திற்கி டமில்லை. இவற்றிற்கு உள்நாட்டில் ஒருபோதும் நாங்கள் தீர்வைப் பெற முடியாது. இவற்றுக்கு தீர்வு காணப்படவேண்டுமாக இருந்தால் ஈழத்திலே அரங்கேறிய ,அரங்கேற்றப்பட்ட கொண்டிருக்கின்ற இனப்படுகொலைக்கு முற்றுமுழுதான ஒரு சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும். அத்தகைய ஒரு சர்வதேச விசாரணையில் வாயிலாகத்தான் இந்த இன அழிப்பிற்கு ஒரு நீதியை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

9 ஆம் பக்கம் தொடர்ச்சி →

## சிறீலங்கா சுதந்திரதினம்...

அரச அலுவலகங்களில் கொடி ஏற்றுவதனால் சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது என்பது மிகவும் அபத்தமானது.

சுதந்திரம் என்பது என்ன? அது உணரப்படுவது. உள்ளத்தால் கொண்டாடப்படுவது. இலங்கை சுதந்திரனத்தை கறுப்பு நாளாக கொண்டாடும் ஈழத் தமிழர்கள் தம்மை அடையாளம் செய்யாத சிங்கக் கொடியை எதிர்த்து நந்திக்கொடியையும் புலிக்கொடியையும் தங்கள் தேசிய கொடியாக ஏற்றியிருக்கின்றனர். தமிழ் தலைவர்கள் தமக்கான தேசிய கீதத்தை உருவாக்கிப் பாடியிருக்கின்றனர். தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்ந்து, அவர்களின் தாயக நிலம் விடுவிக்கப்பட்டு, இனப்படுகொலைக்கான நீதி நிலைநாட்டப்படுகிற நாள்தான் ஈழத் தமிழ் மக்களுக்கு சுதந்திர தினம். அதற்காக துப்பாக்கி ஏந்திப் போராடத் தேவையில்லை. ஈழத் தமிழர்கள் என்ற அடையாளத்துடன் எமது இருப்பை பாதுகாக்கும் அறிவுணர்வுடன் இருப்பதே பெரும் பங்களிப்பு. எங்கள் தேசம் ஒரு நாள் மலரும் என்ற நம்பிக்கையில் இந்த மண்ணில் பல்லாயிரம் வீரர்களை புதைத்திருக்கிறோம். லட்சம் உறவுகள் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காக வாழ்வதும் ஒரு உத்தமமான போராட்டமே.

2 ஆம் பக்கம் தொடர்ச்சி →

## பொத்துவில் முதல் பொலிகண்டி...

இருப்பையே கேள்விக்குறியாக்கக்கூடிய ஆக்கிரமிப்புக்களை நன்கு திட்டமிட்ட முறையில் முன்னெடுத்துவருகின்றது. போரின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வைக்கொடுக்கக்கூடிய அரசியல் திட்டங்கள் எதுவும் அரசிடம் இல்லை. காணாமலாக்கப்பட்டவர்கள் எங்கே என்பது இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் வருடக்கணக்காக குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கலை வழங்கக்கூடிய 13 ஆவது திருத்தத்தைக் கூட இல்லாதொழிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப் படுகின்றன.

தமிழின அழிப்பை நிறுவன மயப்படுத்தியுள்ள சிறிலங்கா அரசாங்கம் நடத்தும் தேசியதின நிகழ்வில் கலந்துகொண்டு இங்கு அனைத்து இன மக்களும் ஐக்கியமாக வாழ்கின்றார்கள் எனக் காட்டிக்கொள்வதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் எனச் தம்மை சொல்லிக்கொள்ளும் சிலர் கூட தயாராக இருக்கின்றார்கள். சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் விலைபோன அவர்கள் சர்வதேச அரங்கில் தவறான ஒரு படத்தைக் காட்ட முற்படுகின்றார்கள். இன அழிப்பில் ஈடுபடும் அரசாங்கத்தைப் பாதுகாப்பதுதான் அவர்களுடைய முழுமையான நோக்கம். உண்மை நிலை என்ன? தமிழ் மக்கள் எங்கே நிற்கின்றார்கள் என்பதைக் காட்டிக்கொள்வதற்கு பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும். சர்வதேசம் தமது கவனத்தை இலங்கையை நோக்கித் திருப்பும் வகையில் இந்தப் போராட்டம் இடம்பெறவேண்டும். மக்கள் உணர்வெழுச்சியுடன் இந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டு தமது உணர்வுகளையும், அபிலாஷைகளையும் வெளிப்படுத்த வேண்டும். ஜெனீவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் முக்கியமாக கவனம் செலுத்தப்படவுள்ள நிலையில், தமிழ் மக்கள் தமது உணர்வுகளை சர்வதேசத்துக்குச் சொல்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்."

7 ஆம் பக்கம் தொடர்ச்சி →

## உடைகிறது கோட்டாவின் இராணுவ வேலி

மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னான்டோ நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரும் 57 ஆவது டிவிசனின் பற்றாலியன் கட்டளை அதிகாரிகளில் ஒருவராக இருந்தவர். இவர் லண்டனில் பாதுகாப்பு ஆலோசகராக இருந்தபோது, போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பயர் தமிழர்களைப் பார்த்து கழுத்தை அறுத்து விடுவேன் என்று சைகை மூலம் எச்சரித்து, அங்குள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர். இவ்வாறாக இப்போது இராணுவக் கட்டமைப்பிலுள்ளவர்கள் பலர் போர்க்கால மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பவர்கள் தான். அதுமாத்திரமன்றி பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ள மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ், சுங்கப் பணிப்பாளராக உள்ள மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரிய, துறைமுக அதிகாரசபைத் தலைவராக உள்ள ஜெனரல் தயா ரத்நாயக்க என்ற போருடன் தொடர்புடைய, மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய படை அதிகாரிகள் பலர் முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள். இவர்களை தன்னைச் சுற்றி வைத்துக் கொள்வதன் மூலம், தனக்கான ஒரு பாதுகாப்புக் கவசத்தை பேணிக் கொள்ளலாம் என்று கணக்குப் போட்டிருந்தார் சிறிலங்கா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச. தனக்கு விசுவாசமான படை அதிகாரிகளை அருகே வைத்துக் கொள்வதன் மூலம், நிலையான பாதுகாப்புக் கிடைக்கும் என்று நம்பினார். கோட்டாபய ராஜபக்ச அரசியல் பின்புலம் கொண்டவரல்ல. அவருக்கென்று ஒரு கட்சியும் கிடையாது. எனவே, எந்த நேரத்திலும் அவரைப் போன்றவர்களை வீழ்த்தப்படக் கூடிய ஆபத்து இருந்து கொண்டே இருக்கும். அதனால் தான், அவர் தன்னைச் சுற்றி அரசியல்வாதிகளும், நீண்டகால அனுபவமிக்க நிர்வாக அதிகாரிகளும் இருப்பதற்குப் பதிலாக, இராணுவ அதிகாரிகளை வைத்துக் கொண்டார். இந்த இராணுவ வேலியின் மூலம், தனது அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்கு அவர் முற்பட்டார்.

ஆனால், கோட்டாபய ராஜபக்ச எதனைப் பலம் என்று நினைத்துக் கொண்டாரோ அதுவே அவருக்கும் அவரது அரசுக்கும் எதிரான ஆயுதமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில், இது தெளிவாகவே கூறப்பட்டிருக்கிறது. நாட்டை இராணுவ மயப்படுத்தி, அதிகாரத்துவத்தை நிலைப்படுத்திக் கொள்ளும் கோட்டாவின் கனவு இப்போது சிக்கலில் வந்து நிற்கிறது. சர்வதேசத்தின் இந்த வலைக்குள் இருந்து கோட்டாபய ராஜபக்சவோ அவரது நிர்வாகமோ இலகுவில் தப்பிக்க முடியாது.

# ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நாட்டின் இறைமையில் கைவைக்கிறாராம்

## சிறீலங்கா அமைச்சர்



ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நாட்டின் இறைமைக்குள் கைவைப்பதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார். மேலும் இராணுவ அதிகாரிகளை முக்கிய பதவிகளில் அமர்த்தும் நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அவரது அறிக்கை முற்றிலும் பிழையானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி கூட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை முக்கிய பதவிகளில் நியமித்துள்ளார் எனவும் சரத் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் சார்பாக அமெரிக்காவின் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவவே தற்போதைய நிலைமக்கு காரணம் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.எனவே இந்த விடயங்களில் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிறந்த முடிவை எடுப்பர் என்றும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவை துரத்தும் கொரோனா – பாதிப்பு எண்ணிக்கை 2.66 கோடியை கடந்தது



உலகம் முழுவதும் பரவி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று, கடந்த ஒரு ஆண்டாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கையில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. வளரும் நாடுகளில் பொருளாதாரம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டது.

அதே நேரம் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட வல்லரசு நாடுகளிலும் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று மிகத் தீவிரமாக பரவி வருகிறது. இங்கிலாந்தில் தடுப்பூசி செலுத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வந்தாலும், புதிய வகை கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனை கட்டுப்படுத்த அங்கு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவில் இன்றைய நிலவரப்படி இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2.66 கோடியை கடந்துள்ளது. கொரோனா வைரசால் அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 4.50 லட்சத்தை தாண்டியுள்ளது. கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 1.63 கோடியை நெருங்குகிறது. மேலும் அமெரிக்காவில் தற்போது 98.80 லட்சத்துக்கும் அதிகமானோர் கொரோனாவிற்கு சிகிச்சை பெற்று வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

# சீன ஊடுருவலை தடுக்க எல்லையில் இந்தியா வகுத்துள்ள புதிய வியூகம்!

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சல பிரதேசத்தை அண்டை நாடான சீனா தொடர்ந்து உரிமை கொண்டாடி வருகிறது. அருணாச்சல் எல்லையில் சீன ராணுவம் அவ்வ போது அத்துமீறி ஊடுருவுவதும், அதை இந்திய ராணுவம் விரட்டியடிப்பதும் தொடர் கதையாக உள்ளது. அருணாச்சல் எல்லையை ஒட்டியுள்ள சீனாவின் நியுஞ்சி பகுதியில், ராணுவ உள்கட்டமைப்பு வசதிகளை, சீன அரசு பலப்படுத்தியுள்ளது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அருணாச்சலில் எல்லைக் கட்டுப்பாடு கோடு பகுதியிலிருந்து, 30 கி.மீ., துாரத்தில் உள்ள இந்திய பகுதியில் பாதுகாப்பு அரண் அமைக்க ராணுவம் முடிவு செய்துள்ளது. இதற்காக அருணாச்சலின் மேற்கு சியாங் மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் பல ஏக்கர் நிலத்தை ராணுவம் கையகப்படுத்தி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# மருந்தை தடுத்தால் அணு குண்டு திட்டம் நாசமாகும்

## பிரிட்டன் எச்சரிக்கை !



கொரோனா தடுப்பூசி மருந்துகள் பிரிட்டன் வருவதை ஐரோப்பிய ஒன்றியம் தடுக்குமேயானால், ஐரோப்பிய ஒன்றியம் கூட்டாக முன்னெடுத்து வரும் அணு குண்டு திட்டம் செயல் அற்றுப் போகும் என்று பிரிட்டன் பிரதமர் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார். வெள்ளிக்கிழமை இரவு 12.00 மணிக்கு திடீரென ஐரோப்பிய ஒன்றிய தலைவி வோன் டாரிடம் ZOOM வழியாக பேசினார். பிரித்தானியாவுக்கு மருந்து வருவதை தடை செய்வது என்பது, பல முதியவர்களை கொலை செய்வதற்கு சமம் என்று அவர் கடுமையாக சாடியுள்ளார்.

பிரித்தானியா கொடுத்து உதவும் விஞ்ஞான தொழில் நுட்பம் மற்றும் பெரும் தொகைப் பணத்தால், ஐரோப்பிய ஒன்றியத்தின் அணு குண்டு திட்டம் மற்றும் அணு உலைத் திட்டங்கள் இடம் பெற்று வருகிறது. மருந்துகள் வந்து சேரவில்லை என்றால், அதனை தாம் நிறுத்தப் போவதாக பிரிட்டன் பிரதமர் சொல்லாமல் சொல்லி உள்ளார். மிகவும் காரசாரமான விவாதங்கள் ZOOM ல் இடம்பெற்றுள்ளதாக ஆங்கில இணையங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

2 ஆம் பக்கம் தொடர்ச்சி →

# சனாதிபதியிடம் நான் ஒப்படைத்த எனது கணவர் எங்கே?

நியமித்து எந்த ஒரு பிரயோசனமும் இல்லை. இது வெறும் கண்துடைப்பு.

கடந்த பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் எந்த ஒரு தலையிடும் தேவையில்லை என்ற இலங்கை அரசாங்கம் அவசர அவசரமாக ஆணைக்குழுவை நியமித்து நியமித்தது எதற்காக?உள்ளக பொறிமுறை என்பது தேவையற்ற ஒன்று எத்தனை ஆணைக்குழுக்கள் வந்தாலும் எமக்கு எந்த ஒரு தீர்வும் கிடைக்கப் போவதில்லை. எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கவுள்ள மனித உரிமை பேரவைக்கு முன்பு அவசர அவசரமாக அமைக்கப்பட்டுள்ள உள்ளக பொறிமுறை எமக்கு தேவையில்லை.

எமக்கு தேவை சர்வதேசப் பொறிமுறையும் சர்வதேச விசாரணைதான் நீதியை பெற்று தரும். சர்வதேசத்தையும் தமிழர்களையும் அடி முட்டாளாக்கும் செயலைத்தான் தற்போது ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்றார்.தமிழர்களாகிய எங்களுக்கு நடமாடும் சுதந்திரம் இல்லை இந்த தேசத்தில் வாழக்கூடிய சுதந்திரம் இல்லை. அவ்வாறான எங்களுக்கு சுதந்திர தினம் எதற்கு? நாங்கள் சுதந்திரத்தை பெறவில்லை. தற்போது வரை எனது வீட்டை சுற்றி ராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நான் ஆயுதம் ஏந்திப் போராட வரவில்லை. எனது கணவரை ஒப்படைத்த ஜனாதிபதியுடன் எனது கணவர் எங்கே என்று கேட்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

2 ஆம் பக்கம் தொடர்ச்சி →

# இன அழிப்பே இலக்கு என்ற சிங்கள...

அநீதியை இழைத்த இராணுவத்தின் பயிற்சியை பெற வேண்டும் என்று எந்த அடிப்படையில் கூறுகிறார் என்று அவர் விளக்கம் அளிக்க வேண்டும். இன்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் இராணுவப் பயிற்சி விவகாரமும் இராணுவ மயமாக்கலும் இராணுவத்தின் கைகளில் நாட்டை தாரை வார்க்கும் செயல்களும் தமிழ் மக்களிடம் மாத்திமின்றி தென்னிலங்கை மக்களிடமும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

உலக நாடுகளில் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இராணுவப் பயிற்சி வழங்கப்படுகிறது. ஆனால் அந்த நாட்டு இராணுவத்தினர், மக்கள் சேவையிலும் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதில் ஒழுக்க விழுமியங்கள் தவறாதவர்களாவும் அதில் சிறந்தவர்களாகவும் உள்ளனர். ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஒழுக்க விழுமியங்களின் சீர்கேடுகளையும் மனித குலத்திற்கு எதிரான இனவழிப்பு மற்றும் பாலியல் வன்முறைகளையும் உலகமே அறியும். ஈழத் தமிழ் இனத்திற்கு எதிராக கடந்த கால வரலாற்றில் ஸ்ரீலங்கா இராணுவம் இழைத்த இனவழிப்பு வன்முறைகளும் முள்ளிவாய்க்காலில் ஆடிய ஊழித் தாண்டவமும் யாவரும் நன்றாக அறிந்ததுவே.

இத்தகைய வரலாற்று சூழ்நிலை காரணமாகவே, வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்த தீர்மானத்தை கொண்டு வந்த விக்கினேஸ்வரே இன்று இவ் இனவழிப்பு இராணுவத்தின் பயிற்சியை பெறவேண்டும் என எப்படி கூற முடியும்? அத்துடன் ஐ.நா அறிக்கையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் இக் கொடுமைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் இன மீறல் செயற்பாடுகளுக்காக சர்வதேச தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன. ஜெனீவா அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் எந்தப் பின்னணியில் யாருக்காக விக்கினேஸ்வரன் இவ்வாறு கூறியுள்ளார்?

தமிழ் இனத்ததை அழிக்கும் ஸ்ரீலங்கா இராணுவப் பயிற்சியை ஆதரித்த திரு விக்கினேஸ்வரன் அவர்கள், அதனை மீளப் பெற்று, தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என வலியுறுத்துவதுடன் தவறினால், வரும் காலத்தில் அவரை ஆதரித்த மக்களால் தூக்கி வீசப்படுவார் என்பதையும் எச்சரிப்பதுடன் கடந்த காலத்தில் அவரின் நியாயமான செயற்பாடுகளை ஆதரித்த வடக்கு, கிழக்கு கல்வி சமூகம் அவரது இந்த நிலைப்பாட்டுக்கு கடும் கண்டனங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.." என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# தாயின் கருப்பையில் இருக்கும்போதே குழந்தைக்கு கொரோனா எதிர்ப்பு சக்தி கிடைக்கும்...



கருப்பையில் இருக்கும்போதே குழந்தைக்கு தாய்மார்களிடமிருந்து கொரோனாவை எதிர்க்கும் ஆன்டிபாடிகள் கிடைப்பதாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றின் கோரத்தாண்டவம், உலக சுகாதார வரலாற்றில் மறக்க முடியாத பேரழிவாக பதிவாகி உள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் உருமாற்றம் அடைந்து மக்களை அச்சுறுத்தி வரும் இந்த வைரசை கட்டுப்படுத்தும் தடுப்பூசி மருந்துகள் பரவலாக பயன்பாட்டிற்கு வந்திருப்பது புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.


எனினும், பிறந்த குழந்தை மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தடுப்பூசி எடுத்துக்கொள்வதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால், அவர்களை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மிகவும் கவனமாக பாதுகாக்க வேண்டியது அவசியம். இது தொடர்பாக அவ்வப்போது வெளிவரும் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், மருத்துவத்துறை உரிய வழிமுறைகளை வழங்குகிறது. அவ்வகையில், அமெரிக்காவின் பிலடெல்பியாவில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையின், மருத்துவ வல்லுநர் டாக்டர் டஸ்டின் பிளானரி மற்றும் அவரது குழுவினர் நடத்திய ஆய்வில், புதிய தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது, கொரோனா வைரசிலிருந்து பாதுகாக்கும் ஆன்டிபாடிகள் பெரும்பாலும் கர்ப்ப காலத்தில் தாயிடமிருந்து குழந்தைக்கு கிடைப்பது தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் குறித்து, அமெரிக்க மருத்துவ சங்கத்தின் மருத்துவ இதழில் ஆய்வாளர்கள் விரிவாக எழுதி உள்ளனர்.

மொத்தம் 1400 தாய்மார்கள் மற்றும் அவர்களின் பச்சிளம் குழந்தைகள் மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், கொரோனாவால் பாதிக்கப்பட்ட அல்லது முன்னர் பாதிக்கப்பட்ட 83 கர்ப்பிணிப் பெண்களில் 72 பேரில், கொரோனாவை எதிர்க்கும் ஐ.ஜி.ஜி என்ற ஆன்டிபாடிகள், நஞ்சுக்கொடி முழுவதும் பரவியிருந்ததை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். இந்த கண்டுபிடிப்பானது, தாய்க்கு பாதிப்பு இருந்தாலும், அவரது குழந்தைக்கு குறைந்தபட்சம் சில பாதுகாப்பை வழங்கும் என்பதை தெரிவிக்கிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி போடுவது அவர்களின் பிறக்காத குழந்தைகளையும் பாதுகாக்கக்கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். கர்ப்பிணிப் பெண்கள் தங்களையும் தங்கள் குழந்தைகளையும் பாதுகாக்க காய்ச்சல் தொடர்பான தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளலாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பிறந்த குழந்தைக்கு கொரோனா வைரஸ் நோயிலிருந்து பாதுகாப்பு அளிக்க, தாய்வழி பெறப்பட்ட குறிப்பிட்ட ஆன்டிபாடிகளின் திறனை தங்கள் கண்டுபிடிப்புகள் நிரூபித்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறி உள்ளனர். பாதிக்கப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளில் எந்த குழந்தைக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை. கொரோனா வைரசுக்கு எதிரான ஆன்டிபாடிகள் உருவாகியிருந்த பெண்களில் 60% பேருக்கு எந்த அறிகுறிகளும் இல்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். கர்ப்ப காலத்தில் தாய்மார்களுக்கு தடுப்பூசி போடப்பட்டாலும் கூட, ஆறு மாதங்களில் குழந்தைகளுக்கு காய்ச்சலுக்கு எதிராக நோய்த்தடுப்பு மருந்துகளை செலுத்தும்படி அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் பரிந்துரை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 14 நாடுகளை சுற்றிவளைத்துள்ள 3 புதிய கொரோனா வைரஸ்கள்

14 நாடுகளில் பரவியுள்ள புதிய கொரோனா வைரஸ்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஐ.நா.சபையுடன் இணைந்த அமைப்பு எச்சரித்துள்ளது. கொரோனா வைரஸ் உருவாகி ஓராண்டு முடிந்துள்ள நிலையில், அதன் உரு மாறி வருகிறது. உரு மாறுகிற புதிய கொரோனா வைரஸ்கள் பல நாடுகளில் பரவி வருகின்றன. சமீபத்தில் இங்கிலாந்தில் தோன்றிய உரு மாறிய வைரஸ், சீனாவில் முதலில் உருவாகி உலகமெங்கும் பரவியுள்ள கொரோனா வைரஸ்களை விட வேகமாக பரவுகிற தன்மையை கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் ஏற்கனவே குறிப்பிட்டனர்.



இந்த நிலையில், தற்போது உருமாறிய 3 கொரோனா வைரஸ்கள், 14 மேற்கு அரைக்கோள நாடுகளில் பரவியுள்ளதாகவும், அவற்றின் தொற்று மற்றும் தீவிர தன்மை அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன என்றும் ஐ.நா. சபையின் அங்கமான பாஹோ என்று அழைக்கப்படுகிற பான் அமெரிக்க சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. இந்த 3 வைரஸ்களில் ஒன்றுதான், இங்கிலாந்து நாட்டிலும், தென் ஆப்பிரிக்காவிலும் காணப்பட்ட வைரஸ் என்று அந்த அமைப்பு கூறுகிறது. இதையொட்டி, பான் அமெரிக்க சுகாதார அமைப்பின் நிகழ்வு மேலாளர் சில்வைன் ஆல்டிகேரி கூறும்போது, "இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட 2 வகை வைரஸ்கள், அமெரிக்காவின் பிராந்தியத்தில் சமூக பரவலை ஏற்படுத்தியதாக தெரியவில்லை. இதுவரை அந்த இரு நாடுகளில் இருந்தோ அல்லது அந்த நாடுகளுக்கோ பயணிக்கும் நபர்களிடம் இருந்து மட்டுமே அந்த வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது" என குறிப்பிட்டார்.

மூன்றாவது வகை வைரஸ், பிரேசில் நாட்டின் அமேசோனாஸ் மாகாணத்தில் கண்டறியப்பட்டுள்ளது. இது உள்நாட்டில் பரவலாக இருக்கிறது. அங்குள்ள மானுஸ் நகரில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள பலருக்கு அந்த வைரஸ் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது.சீனாவில் இருந்து வந்த அசல் கொரோனா வைரசை விட இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள உரு மாறிய கொரோனா அதிக மரண ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் பான் அமெரிக்க சுகாதார அமைப்பு கூறுகிறது. இவ்விரு வைரஸ்களும் அதிகமாக பரவுகிற நிலை இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அதே நேரத்தில் அமெரிக்காவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மாடர்னா மற்றும் பைசர் பயோஎன்டெக் நிறுவனங்களின் தடுப்பூசிகள், இந்த இரு வைரஸ்களுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகின்றன என்று அந்த நிறுவனங்கள் கூறுகின்றன. எதிர்கால பிறழ்வுகளுக்காக தேவையான கூடுதல் பூஸ்டர் தடுப்பூசிகளை இந்த நிறுவனங்கள் உருவாக்கி வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

## கொரோனா வைரஸ் தோற்றம் பற்றி உலக சுகாதார நிறுவனம் சீனாவில்

### 2 வது நாளாக ஆய்வு

உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழு கொரோனா வைரஸ் தோற்றம் பற்றி உகான் நகரில் 2-வது நாளாக விசாரணை நடத்தியது.

**சீனாவிற்குள் உலக சுகாதார நிறுவன குழு**


சீனாவின் உகான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் பெருந்தொற்று, உலக நாடுகளையெல்லாம் உலுக்கி விட்டது. இன்றளவும் அதற்கு எதிராக உலகமே ஒன்றிணைந்து யுத்தம் நடத்தி வருகிறது. இந்த தருணத்தில், கொரோனா வைரஸ் உகான் நகரில்தான் தோன்றியது என்பதை சீனா மறுக்கிறது. ஆனாலும், இந்த வைரஸ் அங்குதான் தோன்றியதா என்பதை கண்டறிவதற்கு உலக சுகாதார நிறுவனம், தனது நிபுணர்கள் குழுவை அங்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த குழுவினர் விலங்குகளின் ஆரோக்கியம், வைராலஜி, உணவு பாதுகாப்பு, தொற்றுநோயியல் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்கள் 2 வார காலம் அங்கு தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது வெளியே வந்து தங்கள் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

**விஞ்ஞானிகளிடம் விசாரணை**

சீன விஞ்ஞானிகளை நேற்று முன்தினம் நேருக்கு நேர் சந்தித்து, இவர்கள் விசாரணை நடத்தினர். கொரோனா வைரஸ் தொடர்பான பல கேள்விகளை எழுப்பி பதில்களை பெற்று பதிவு செய்தனர். ஹூபெய் ஒருங்கிணைந்த சீன மற்றும் மேற்கத்திய மருத்துவ ஆஸ்பத்திரிக்கும் அவர்கள் சென்று விசாரணை நடத்தினர். இங்கு கொரோனா நோயாளிகளுக்கு முதன் முதலாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

**2 ஆவது நாள்...**

இந்த குழுவினர் 2 ஆவது நாளாக நேற்று உகானில் உள்ள ஜின்யந்தன் ஆஸ்பத்திரியில் ஆய்வும், விசாரணையும் நடத்தினர். ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளானோருக்கு சிகிச்சை அளித்த ஆஸ்பத்திரிகளில் இதுவும் ஒன்றாகும். அதுமட்டுமின்றி இந்த தொற்றுநோயியல் வரலாற்றில் இந்த ஆஸ்பத்திரி ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இருப்பினும், உகான் வைராலஜி இன்ஸ்டிடியூட்டில் உலக சுகாதார நிறுவன நிபுணர் குழுவினர் முக்கிய கவனம் செலுத்துவார்கள் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இங்குதான் சீனாவின் முன்னணி வைரஸ் ஆராய்ச்சி ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்டவை உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# அடகுக்கு முறைக்கு எதிராக வடக்கு கிழக்கில் தொடர் போராட்டம்




## சிவில் அமைப்புக்கள் கூட்டாக அழைப்பு

வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன. எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ள இந்தப் போராட்டம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்கள் விடுத்துள்ளது

அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் வருமாறு,

வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுதிரளுமாறு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் அழைப்பு விடுக்கின்றோம். வடக்கு, கிழக்கு பூர்வீக குடிகளான நாம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எங்களது சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடி வருகின்றோம். ஆனால், தமிழர்களின் போராட்டங்களுக்கு செவிசாய்க்காத இலங்கை அரசு தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை யாவரும் அறிவோம் .

போர் நிறைவடைந்து கடந்த பத்து ஆண்டுகளில் வடக்கு, கிழக்கை இராணுவ மையமாக்கி வரும் இலங்கை அரசு தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடக்கு, கிழக்கு பூர்வீகக் குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காகப் பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்த மயமாக்கல் திட்டங்களை இலங்கை அரசானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வடக்கு, கிழக்கில் குருந்தூர்மலை ஐயனார் கோயில், வெடுக்குநாறி மலை சிவன் கோயில், நிலாவரை ஆகியவற்றுடன் கிழக்கில் கன்னியா பிள்ளையார் கோயில், முருகன் ஆலயம், வேற்றுச்சேனை சித்திவிநாயகர் ஆலயம் உட்பட்ட பல ஆலயங்களில் தமது பாரம்பரிய, கலாசார, சமய, வழிபாடுகளைச் செய்ய முடியாதவாறு ஆலயங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதோடு அங்கு பௌத்த ஆலயங்களை நிறுவுவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. மேலும் வடக்கு, கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்களும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறான செயல்கள், செயற்பாட்டாளர்களின் பேச்சுரிமை, அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும். தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்களக் குடியேற்றங்களும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைக் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்கும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பில் உள்ள பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால் தரும் பசுக்களை திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும் நடந்தேறி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக காடுகள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாஸாக்களைப் புதைக்கும் செயற்பாடுகளை இல்லாமல் செய்து ஜனாஸாக்கள் எரியூட்டப்பட்டு வருகின்றன. இதற்கு எதிராகப் போராடும் முஸ்லிம் சமூகத்தையும் அரச தரப்பினர் அடக்கி ஆள முனைகின்றனர். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பின்னர் பலதரப்பட்ட இஸ்லாமிய மக்களைப் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தடுத்துவைத்துள்ளனர். இதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரையும் கைதுசெய்து பல வருடங்களாகத் தடுத்து வைத்துள்ளனர். இதேபோன்று சிறைகளில் விசாரணைகள் இன்றி தமிழ் அரசியல் கைதிகளாகப் பலர் உள்ளனர். ஆனால், பல குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ள அரசு, இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யத் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தங்களது காணாமல் ஆக்கப்பட் உறவுகளைத் தேடி வருடக்கணக்கில் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். ஆனால், அவர்களுக்கான நீதியை வழங்காது அரசு ஏமாற்றி வருகின்றது. அத்துடன் மலையகத் தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்துக்காக ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கேட்டுப் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாது அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உட்பட இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வடக்கு- கிழக்கு தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான கவனயீர்ப்பு போராட்டத்தை எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் தமிழ் பேசும் மக்களாகிய எமது அவலக் குரல்கள் சர்வதேசத்தின் மனச்சாட்சிகளைத் தட்டும் அளவுக்கு எமது போராட்டத்தை அஹிம்சை வழியில் முன்னெடுக்க வேண்டியுள்ளதால் அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்படவுள்ள மேற்படி போராட்டத்துக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளன. எனவே, அரசியல் கட்சிகள் உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள அனைவரும் மேற்படி போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி கலந்துகொள்ளுமாறு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுக்கின்றோம் என அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

